வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
பதிப்பித்தது.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TAMIL
PRESIDENCY COLLEGE
TRIPLICANE
MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
ADYAR, MADRAS

# தசரதன் தவறு.

விலை: அணா-1.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தசரதன் தவறு.

இஃது

## அங்கம்

என்னும் ஒருவகைத் தமிழ்நாடகம்.


கடலூர்க் கலாசாலைத்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

**ந. பலராம ஐயர்**

இயற்றியது.



சென்னை:

கி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

1901.



[*All Rights Reserved.*]

PRINTED BY THOMPSON AND CO., AT THE "MINERVA" PRESS, MADRAS.

TO

**M.R.Ry. A. Subbarayalu Reddiar Avl., B.A., B.L.,**

*High Court Vakil,*

*Secretary, The Cuddalore College Council.*

**THIS DRAMA**

IS RESPECTFULLY DEDICATED

As a token of respect and esteem

BY

**THE AUTHOR**

# உரிமையுரை.

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உயரரண் செறிந்த வயோத்திமன் னவனு
    லகினை யொருபுயத் தேந்துந்
தயரதன் றவத்திற் போந்தநீ தியினைச்
    சாற்றுவான் றோன்றிய நகைநீர்க்
கயமுறுங் கமல மனையவின் னூலைக்
    களிப்புடன் காத்தினி லேற்றி
நயகுண சுப்ப ராயலுப் பெயர்கொ
    ணம்பியே நியாயநூற் புலவோய்.

நூலாசிரியர்.

# முகவுரை.

கடல்புடை சூழ்ந்த இவ்வுலகின்கண் மூதூர் எழனுள் ஒன்றெனமிளிரும் அயோத்திமா நகரிற் செங்கோல் செலுத்திவந்த **தசரத சக்கிரவர்த்தி** தனது இளமைப் பருவத்து ஒரு நாள் வேட்டையாடச் சென்றபொழுது ஆங்கண் ஒரு முனிமகனைக் களிறெனமருண்டு கணை விடுத்து எய்து கொன்றனன். அங்ஙனந் தயரதன் அறியாது செய்த தவற்றினைக் கொண்டு இச்சிறு நாடகத்தை மெய்யுரைக்கதைத்தாய்ப் புனைந்தாம். "உண்மையாயுலகி னிகழ்ந்தியாவர்க்குந், தெரிந்த காதை தெளிப்பது மெய்யுரை"

இனி இந்நூல் **அங்கம்** என்னும் ஒருவகை நாடகம். இது வடநூலார் கூறுந் தசரூபகங்களுள் ஒன்றாம். இவ்வுருவகங்களனைத்தையும் நாடகத் தமிழாசிரியர் சாதியெனக் கூறுப. இதன்கண் அவலச்சுவையே பெரிதும் விரித்துக் காட்டப்படும். மக்களைப் பாத்திரமாக்கொண்டு வாதமும் வாய்ப்போருங் காட்டி இஃது ஓரங்கத்தி னிறுவது. இதனைச் **சிறப்பங்க** மெனச்சொல்லுதலுமுண்டு. என்னை ?

"அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்
கவலைகொள் மகளிர் கசிந்தள மழுங்க
வண்மினர் வாய்விடுத் தரற்றுமாண் பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள்பாத் திரமா வயங்குறு வதுவே
யங்க மென்ன வறிதல் வேண்டும்"
"உறுப்பி னின்றும் வேற்றுமை காணச்
சிறப்பங் கம்மெனச் செப்பலு முண்டே"

என்றார் **நாடக வியலுடையாரும்.**

தோன்றியவாறு புனைந்த விந்நூலிற் பொதுளிய பிழைகளை நீக்கிப் பேரறிவுடையோர் இதனை மேற்கொள்வாராக.

ந. ப.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR Lib.
THIRUVANMIYUR, MADRAS-4

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தசரதன் தவறு.

## பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

#### விநாயகர் வணக்கம்.

குறள் வெண்பா.

நூல்வாய்ப் பெரிதுமுற நோக்கியருள் செய்யுநனி
நால்வாய்ப் பெருமான் றுயம். (௧)

#### நடராசர் வணக்கம்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகெலா நின்படைப் புயிரெலா நின்படைப்
புலைசெயுந் தொழில்களெல்லா
மூழ்வினைப் பயனென வுருத்துவந் துறுமென்ற
வுண்மையுரை யென்றுணர்ந்தே
மலகிலாக் கலைதேர்ந்து பலதுறைக ளிற்பயின்
றறிவுநிறை யோர்ப்பினுடனே
யருங்கடைப் பிடிமேவு மரசருஞ் சிலவேளை
யையயிழை போவரென்றுற்
பலவகைப் பழவினை யெனுஞ்சூழற் பட்டநாம்
பாரினிற் படர்வுறுது
பரிகரித் தேகலெவ ணின்னழகு சாலருட்
பார்வையெம் மேற்படாம

னலமிளிர் சிதாகாச நாப்பணெழு செம்பரிதி
ஞானவொளி நல்குமின்ப
நடராச பொன்னம் பலத்தாடு நின்பாத
நாண்மலர் வணங்குதுமரோ.

---

## ஆசிரிய வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மூதுமறையந் தணர்கோவை முத்தமிழா சிரியனையெம்
முதல்வன் றன்னை
நதிமௌலி தனைப்பணியு நாடகத்தி னியல்வகுத்த
நம்பி யைச்செம்
புதுமலர்க ளனையமா றுக்கர்தம துளமினிது
பூப்பப் போர்த்தும்
மதிமிளிர வொளிவழங்கு பரிதிமாற் கலைஞனையாம்
வணக்கஞ் செய்வாம்.

---

## அவையடக்கம்.

வஞ்சிவிருத்தம்.

என்றே வொருவா றிதுபுனைந்தேம்
பொன்னேர் புலவோர் புரைபலகண்
டென்னே யிதுவென் றிகழ்வரல
ரன்றோர் மகப்பே றடைந்தவரால்.

## நாடக பாத்திரங்கள்.

க. தசரதன்:—அயோத்திமன்னன்.

உ. ஏமநாதன்:—தசரதனை யடுத்தவிடன்.

௩. சலபோசனர்:—அயோத்தியையடுத்த காட்டில் வசிக்கும் ஒரு முனிவர்.

௪. சுசீலை:—சலபோசனருடைய மனைவி.

௫. சுரோசனன்:—சலபோசனருடைய புதல்வன்.

## நாடக நிகழ்விடம்.

அயோத்தியையடுத்த காடும் அதன்கணுள்ள முனிவராச்சிரமமுமாம்.

# தசரதன் தவறு.

## முதற் களம்.

இடம்: முனிவராச்சிரமம்.

காலம்: நண்பகல்.

பாத்திரங்கள்:—சலபோசனர், சுசீலை, சுரோசனன்.

**சலபோசனர்:**—குழந்தாய்! சுரோசனா! அடுத்தவனத்திலிருந்து நீ கொணர்ந்த அபூர்வமான பழங்கள் வெகு ருசிகரமாயிருக்கின்றன. தேவலோகத்திலிருக்கும் கற்பக விருக்ஷத்தின் பழங்களும், இவ்வளவு மதுரமாயிருக்குமோவென்று சந்தேகிக்கின்றேன்.—என்ன! சுசீலே! இந்தப்பழங்கள் எவ்வளவு நேர்த்தியாயிருக்கின்றன! பார்த்தனையா?

**சுசீலை:**—சுவாமி! நமது குழந்தை நமக்காக எவ்வளவோ அன்புடன் வெகு சிரமப்பட்டுச் சம்பாதித்துவந்தபழங்களைப்பற்றிக் கேட்பானேன்? அவனன்பே அவ்வளவு ருசிக்குங் காரணம். பழத்திலென்ன இருக்கின்றன? அன்பு கலந்தவிடத்து அமிர்தமொழுகுமன்றே? அன்பு தெய்வத்தன்மையதாதலின் அஃது எல்லாம் வல்லது. அன்பே உருவமாகக் கொண்டிருந்த என் குழந்தை கையால் தொட்டுக்கொடுத்த எல்லாப் பொருளும் என் மனத்திற்கு மிக ரம்மியமாயிருக்கும். கண்ணில்லாத காலத்தில் நமக்கு ஊன்றுகோல்போல இருந்து காப்பாற்றி வரும் நம் கண்மணியே நமக்குச் சகல பாக்கியமும் என்று கருதியிருக்கிறேன். 'சர்வேந்த்ரியாணாம் நயனம் பிரதானம்' என்றும் 'கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை' என்றும் தாங்கள் அடிக்

கடி கூறுவன பொய்யாக நமக்குக் கண்ணிற் சிறந்த உறுப்பாய் விளங்கும் காதலனை யாம் பெற்றது பூர்வ ஜன்ம புண்ணியமே.

**சலபோசனர்:**—சுரோசனா! என் கண்மணி! நீ அசனம் அருந்தினையோ? இந்தப் பழங்களைச் சாப்பிடு. நீ பழங்கொண்டுவரக் காட்டிற்குப் போயினையே, அவ்விடத்தில் நீ எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாய்! எங்களுக்குக் கண்போனதும், கண்ணுக்குக் கண்ணான அருமை மைந்தன் நீ அதனிமித்தம் கஷ்டத்திற்குள்ளாவதும் விதிவசமோ? தெய்வமே! பூர்வ ஜன்மத்தில் நாங்கள் என்ன பாபஞ் செய்தோ கண்ணை இழந்தோம்! பாபாத்துமாக்களாகிய எங்களுடைய வயிற்றிற் பிறந்த பாபத்தினால் நீயுங் கஷ்டப்படவேண்டியிருக்கிறதே! குழந்தாய்! அப்பா! உன்னுடைய கஷ்டத்தை நினைக்க நினைக்க என்னுடல் உருகுகின்றதே! மனம் நோகின்றதே! என் கண்ணே! எத்தனை கஷ்டந்தாம் படுவாய் நீ? அத்தனையும் உன்னுடைய மெல்லிய உடல் தாங்குமோ? ஐயோ! பழமொரு தோப்பில், கிழங்கொரு காட்டில், ஜலமொரு புதரில்! * ஒன்றுக்கொன்று எவ்விடத்துக் கெவ்விடம்! எத்தனை தூரம்! அந்தோ! இந்த இடங்களிலெல்லாம் துஷ்ட மிருகங்களெதிர்ப்பட்டால் என் செய்வை? ஐயோ அதை நினைத்தாலும் நடுங்குகிறதே மனம்! வயறு பகீர் என்கின்றதே! என் கண்ணே! உன் நிலைமையை என்னென்று சொல்வேன்! (இரங்கிப் பாடுகின்றார்.)

செங்கமலப் பாதஞ் சிவந்தனவோ முட்பரலான்
வெங்கதிரோன் றீக்கதிரான் மேனி வெதும்பினையோ? (௫)

கானகத்து வாழுங் கடும்புலிவாய்ப் பேரொலிகேட்
டீனமிலாக் கண்ணே யுயங்கி யொடுங்கினையோ? (௬)

தாக்கணங்கும் மோகினியுந் தாமருட்ட நீமயங்கிப்
போக்கொழிந்து கையற் றயர்ந்தனையோ புண்ணியனே? (௭)

---

* இதைச் சொல்லும்போது கையினால் வேறு வேறு மூலைகளைக் காட்டுகின்றார்.

சேந்தா மரைக்கரத்தாற் றீண்டிமர மேறியக்கா
லந்தோநீ நொந்தின் றரற்றினையோ வன்புடையாய்? (அ)

சுசீலை:—சுவாமி! நீங்களேன் இந்தக் கஷ்டத்தை யெல்லாம் எடுத்துச் சொல்லுகிறீர்கள்? இவற்றைக் கேட்க என் மனம் சகிக்க வில்லையே! (இரங்கிப்பாடுகின்றாள்.)

பத்து மதியுன்னைப் பாவி வயிறுளைய
வித்துயருக் கோசுமந்தே னின்பப் புதல்வாவோ! (க)
ஐயாவென் கண்ணே யனிச்சமெனு நின்மேனி
ஐயோ வெயிலா லழன்று வதங்கினையோ? (க0)

குழந்தைகளைப் பயமுறுத்துவதற்குப் 'புலி' 'கரடி' என்று சொன்னாற் போதுமே. பால் மணம்மாறாப் பாலகன் நீ புலிகளும் கரடிகளும் மற்றுமுள்ள துஷ்டமிருகங்களுங் கூட்டங் கூட்டமாய் உலாவருங் காட்டினிடைச் செல்லுகின்றனையே. அன்றியும், அம்மிருகங்களை யுத்தேசித்து வேடர் முதலாயினோர் விடுக்குங் கணைகள்பல வழியிற் குறுக்கே அலையுமே. எங்களுக்குப் பணிவிடை செய்யவேண்டின் நீ இத்தனை ஆபத்துக்களுக்கும் ஆளாகவேண்டுமா?

சலபோசனர்:—என் கண்ணே! என்னருகில் வா. என்னைக் கட்டிக்கொள். (புதல்வன் அருகில் வர அவனைத் தழுவி முத்தமிட்டு உச்சி மோக்கின்றார்) உடம்பு மிக இளைப்படைந்திருப்பதாகத் தோன்றுகிறதே! அப்பா! இப்படியுட்காரு. (தன் மடியில் உட்காரவைத்துக்கொள்கின்றார்.)

சுரோசனன்:—தாங்கள் வருத்தப்படவேண்டாம். தங்கள் ஆசீர்வாத பலம் பரிபூரணமா யிருக்கும்பொழுது எனக்கு எவ்விதக் குறையும் வாரா. நான் இப்படி யுட்காருகின்றேன்.
(கீழே யுட்காருகின்றான்.)

சலபோசனர்:—என்னருமருந்தே! நீ திவ்வியமான பாசுரங்களைக் கர்ணாமிர்தமாய்ப் பாடுவாயே. எங்கே, சில பாடல்கள் பாடு, கேட்போம்.

சுரோசனன்:—நன்று, அப்படியே செய்கின்றேன். (பாடுகின்றான்.)

பணிமுனி புலிக்காலர் பரவுகுஞ் சிதபாத
பதுமமென துளவாவிவா
யணிபெற மலர்ந்துநறு மணநாறி நறையுகுத்
தானந்த மீவதெஞ்ஞான்
றுணுநஞ் சினைக்கள மடக்கிமதி யொளிமுடி
யிருக்கவோ ரொண்டொடியிடத்
தணுகியக லாதென்று மைந்தொழி னடாத்திப்பொ
னம்பலத் தாடுமரசே. (கக)

பூத்த நன்மனப் புண்டரி கத்துல
கேத்து நீற்றொளி யேய்ந்த வெகினமே
நீத்து மும்மல நீரை யுயிரெனும்
வாய்த்த பாலை மகிழ்ந்து மடுப்பையால். (கஉ)

ஈசீலை:—குழந்தாய்! நீ பாடியது போதும் போதும். உனக்குத் தொண்டையும் வாயும் வலியெடுக்குமே. எனது சுகத்திற்குப் பாடல் இன்றியமையாததன்றே! பாடப்பாட இனிமையாகத் தானிருக்கிறது. இருந்தாலும் நீ கஷ்டப்படுவது என் மனத்தைப் புண்ணுறுக்குகிறது.

ஈரோசனன்:—அம்மா! இதெனக்குளத் துணைக்கஷ்டமுந் தாராது. கடவுளைத் துதிப்பதைக்காட்டினும் வேறு பேரின்பமுளதோ? எப்பொருட்கும் இறைவனும் ஈசனை வாழ்த்திப்பாடாதவாயாற் பயனென்னை? (பாடுகின்றான்)

நளிர்மதிச் சடைமுடி நாரி பாகனைக்
களிகொள மனத்திரீஇக் கனிந்த பாடலிற்
றெளியறி வுடன்றுதி செய்கி லாதவா
யளைமுழை பிலமென லறைவு நேரிதே. (கங)

அங்கயிலை தூக்கி யடலழிந்த வல்லரக்கன்
சங்கரா காத்தியெனச் சாமகீ தம்மெடுப்பப்
பொங்கு மருள்பொழிந்த புங்கவனைப் புண்ணியனை
நங்கடவு ளைப்போற்று நாவென்ன நாவே
நமச்சிவா யாவென்னு நாவென்ன நாவே. (கச)

விலங்கு முதலியனவும் வாயால் உணவுகொள்ளுகின்றன. அதுவோ ஆறறிவுயிராய மானுடர் பெற்றவாயின் பயன்? மேலும், விலங்கினங்களைப்போலத் தமது ஆகாரத்தினைக் கிழித்து நசுக்கி யுட்செலுத்து மாற்றல் நமது நுண்ணியவாய் பெற்றுளதோ? (பாடுகின்றான்)

* "அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை
யருமறையி னகத்தானை யணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே." (கரு)

**சலபோசனர்**:—என்னுயிரினும் இனிய மைந்தா! காநரசம்பருகின் அஞ்செவி குளிர்ந்தது.—இஃதென்னே! இவ்வளவு வெப்பமான காற்றடிக்கின்றதே! இதன்முன் எல்லாம் வறண்டு போம். எனக்குத்தாகம் மிகுவதனாற் கொஞ்சம் தீர்த்தம்தா.

**சுசீலை**:—அப்பா, குழந்தாய்! அந்தக் குடத்தில் மிகுந்திருந்த தீர்த்தத்தை நான் தாகமிகுதியாற் பருகி விட்டேன்! இதுதானு உனக்கு நான் செய்யு முபகாரம்? வேலையைக் குறைப்பதின்றிப் பெருக்குகின்றேனே! ஹா! பாபம்! பாபம்!!

**சுரோசனன்**:—அதனாலென்ன? அம்மா! இதோ ஒரு நொடிப் பொழுதில் அடுத்த காட்டிற்கு ஓடிச் செங்கழு நீர்ச்சுனையினின்றும் இக்குடம் நிறையத் தீர்த்தங்கொண்டு உடனே வருகின்றேன். இதற்காக ஆயாசப்படவேண்டாம். எனக்கு ஏதோர் பிரயாசையா?

**சலபோசனர்**:—அடா! குழந்தாய்! தினகரன் தன் வெங்கதிர்களால் உன் மலர்போன்ற செவ்விய மேனியை வாட்டுவனே! என் கண்ணே! எனக்குத் தீர்த்தம் வேண்டாம்! இப்பொழுது தாகஞ் சிறிதுமில்லை.

* தேவாரம்.

**சுசீலை** :—அடே! மைந்தா! எனக்குத் திடீரென்று உடல் பதறுகின்றதே! வலத்தோளும் வலக்கண்ணும் படபடவென்றடிக்கின்றனவே! மனங் கலங்குகின்றதே! நாக்குழறுகின்றதே! கிறுகிறென்று தலை சுழலுகின்றதே! (கீழே சாய்கின்றாள்)

**சுரோசனன்** :—(தாயைத் தன் மார்பின்மீது சாய்த்துக்கொண்டு அருகிலிருந்த வொரு தேக்கிலையாற் சிவிறக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கண் விழிக்கின்றாள்.) அம்மா! இப்பொழுது உடம்பு எப்படி யிருக்கின்றது? கொஞ்சமாயினும் மயக்கம் நீங்கியதா? இப்படிச் சாய்ந்துகொள்.

(நன்றாகச் சார்த்திக்கொள்ளுகின்றான்.)

**சுசீலை** :—(மெதுவாய்) கொஞ்சம் சௌக்கியமா யிருக்கிறது. என்னவோ ஒரு விதமாயிருந்தது, இப்பொழுது ஒன்றுமில்லை.

**சலபோசனர்** :—அப்பா! குழந்தாய்! உன் அம்மை என்ன சொல்லுகிறாள்? ஒரு நோயுமறியாதவள் துன்பஞ் சிறிதுஞ் சகியாள். இன்று ஏதோ திடீரென்று அசௌக்கிய மடைந்தாள். இப்பொழுது எப்படி யிருக்கிறதாம்?

**சுரோசனன்** :—அப்பா! என்னவோ மயக்கம்போலிருந்ததாம். இப்பொழுது ஒன்றுமில்லையாம்.

**சலபோசனர்** :—(தனக்குள்) மானுடச் சரீரத்தினியல்பு அதுவேயன்றோ? அது கார்காலத்துப் பொழியும் மழைநீரின் குமிழிபோற்றோன்றி மாயுமன்றே? வயோதிக நிலையடையுமுன்னரே சரீரதிடத்துடன் இவ்வுலக வாழ்வினை நீத்தவனே புண்ணியவான். பலவிதப் பிறவித் துன்பங்களா லிடர்ப்பட்டு நரை திரைமூப்பால் வருந்தலினும் உடற்சுமையை நீக்கிக் கொள்ளலே நன்று. (இரங்கிப் பாடுகின்றார்)

பற்கழன்று கண்ணிரண்டும் பஞ்சடைய மெய்நடுங்கிச்
சொற்குழறு மூப்பிற் றுயர்நரகும் வேறுளதோ? (௧௬)

மூவா முதல்வா மொழியும் பிறப்பிறப்பை
மேவா துனைதருளான் வீட்டி விலக்குதியால். (௧௭)

(இருமிப் பொருமுகின்றார்)

**சுரோசனன் :**—அப்பா ! தங்களுக்குத் தொண்டை வறண்டு கமறுகின்றது. அப்போதே தீர்த்தங்கேட்டீர்களே ! இதோ கொண்டோடி வருகின்றேன். தயைசெய்து சற்று விடைகொடுங்கள்.

**சுசீலை :**—அடா ! குழந்தாய்!என் கண்ணே ! நீ இப்பொழுது போவது என் மனத்துக்குச் சமாதானமாயிருக்கவில்லை. எனக்கு வலக்கண் துடித்தல் முதலிய அபசகுனங்கள் நேரிட்டனவே ! என்ன துன்பத்திற்காக அவை தோன்றினவோ ? அறியேன். அப்பா ! நீ போகாதே. சிறிது பொழுது கழித்த பின்னர்ச் சூரியனு மஸ்தமிப்பான் ; வெப்பமுந் தணியும் ; நீயும் உன் மாலைக் கடனை முடித்துத் திரும்புங்கால் தீர்த்தங்கொண்டு வரலாம். இப்பொழுது அவசரமென்னை ?

**சலபோசனர் :**—என் இன்னுயிரினுஞ் சிறந்த இன்பப் புதல்வ ! உன் தாய் சொல்லுவதே சரியெனத் தோன்றுகின்றது.

* "தாய்சொற் றுறந்தொரு வாசக மில்லை" (கஅ)

ஆதலின் அவள் மொழியை அலக்ஷியம் செய்யாதே.

**சுரோசனன் :**—(பாடுகின்றான்)

தந்தைதாய் தளர்வுற் றுங்குத் தனயனுற் றன்று சோலை
வந்தவர்த் தாங்கி யன்றோர் மயர்வினை யகற்றி டானே
னிந்தனைக் குரிய னுயிர் நீணிலத் தறிஞர் தூற்ற
வெந்தெரிநிரயத் தாழ்ந்து வெதும்புதன் மெய்ம்மையாமால். (கக)

அன்றியும், இக்காலத்திற் சொப்பனமுஞ் சோதிடமுஞ் சகுனமும் வைத்தியமும் பலிக்கினும் பலிக்கும், பலியாவிடினு மில்லை. ஏதோ அம்மாவுக்குச் சற்றுப்படபடப்பா யிருந்ததென்று தங்களுடைய தாகத்தைத் தணிக்க நீர் கொண்டுவராமல் நான் நிற்கலாமா ? அவளுக்குக் கொஞ்சம் பித்த மதிகரித்திருக்கும் ; தள்ளாத உடம்பன்றோ ? அது தாங்காமல் நரம்புகள் துடித்திருக்கும். பெண்பாலார்க்குரிய பயந்த தன்மையினால் அவள் என்னைப் போகவேண்டாம் என்றனள். அதனை நாம்

* கொன்றை வேந்தன்.

ஒரு பொருட்டாகக் கொள்ளலாமா? விடையருளுங்கள். இதோ போய் நீர் கொண்டோடி வருவேன். அது பரியந்தம் என்னைப்பற்றி விசாரப்படவேண்டாம்.

(குடம் எடுத்து வெளியே போகின்றான்)

**சலபோசனர்:**—சுசீலே! இப்படிப்பட்ட புதல்வன் நமக்குக்கிடைத்தது பாக்கியந்தான். நமக்காக அவன் எவ்வளவு கஷ்டப்படுகின்றான். அவனைச் சுவாமியே காப்பாற்றவேண்டும். ஈசுவரானுக்கிரகப்படியெல்லாம் நடக்கட்டும். ஜகதீசா! மகாதேவா! ஸாம்பஸதாசிவா! கைலாஸநாதா! என்னப்பனே! ஒப்பிலாமணியே! எல்லா முன்னுடையசெயலன்றோ?—சுசீலே! என்னவோ இன்றைத்தினம் நீ அபசகுனங் கண்டதற்கேற்ப ஒருநாளுமில்லாத மனக்குழப்பம் எனக்கும் உண்டாகின்றது—நல்லது, இந்தப் பக்கமா நான் சற்று ஆச்சிரமத்துக்கு வெளியே நின்று நங்குழந்தை சுரோசனனைக் கூப்பிடுகின்றேன்; நீ சிறிது நேரம் இங்கேயே உட்கார்ந்திரு.

**சுசீலை:**—இல்லை. எனக்குக் கொஞ்சங் களைப்பா யிருப்பதனாற் சற்று நேரம் உட்புறத்திற் படுத்துறங்குகிறேன். குழந்தை வந்தவுடனே என்னை மறவாமற் கூப்பிடுங்கள்—ஹே! கௌரீ! சங்கரீ! மகேசுவரீ! எல்லாவற்றிற்கும் நீதான் குழந்தையைக் காப்பாற்றவேண்டும்.

(சலபோசனர் வெளியே போகின்றார்; சுசீலை உள்ளே செல்லுகின்றாள்.)

# இரண்டாங் களம்.

இடம் : காடு.

காலம் : நண்பகல்.

பாத்திரங்கள் : தசரதன், ஏமநாதன்.

**தசரதன்** :—ஏமநாதா ! இன்றைத்தினம் பரிதியின் கதிர்கள் எவ்வளவு கடுமையாயிருந்தன. இந்த வனங்கள் இங்கில்லாவிடின் நாம் மிகுந்த துன்பத்தை யடைந்திருப்போம் என்பதற்குச் சந்தேகமே யில்லை.

**ஏமநாதன்** :—மகாராஜா ! நாம் பார்த்துவந்த காடுகளெல்லாம் இப்பொழுது நாமிருக்கும் இந்தக் காட்டிற்கு நிகராகாவென்று தோன்றுகின்றது. அஃதிருக்கட்டும், இப்பொழுது நாம் கடந்துவந்த வனத்தில் நடந்த அற்புதத்தைக் கவனித்தீர்களா?

**தசரதன்** :—எதைப்பற்றிச் சொல்லுகின்றாய் ?

**ஏமநாதன்** :—நாம் வருகிற வழியில் ஒரு மரத்தடியில் ஒரு முனிவர் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்து இருந்தனரே, அவர் எதிரில் ஒரு குரங்கு சில பழங்களைக் கொணர்ந்து வைத்து அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து போயிற்று, அது தான், மகாராஜா ! எனக்கு மிக ஆச்சரியமா யிருக்கின்றது.

**தசரதன்** :—இதுதானா ? இஃதென்ன ஆச்சரியம் ? முனிவரர்கள் வதியும் இடத்தில் உடன் இருக்கும் மிகக்கொடிய தீயரும் நல்லவராவார்களே ! அவர்களுடைய பெருமையை இவ்வளவு என்று நம்மாற் கணக்கிட முடியுமா ? (பாடுகின்றான்)

பனிபடு சோலை யெங்கும் பழங்கிழங் காய்ந்து தந்து
கனிவொடு கடுவன் மந்தி கரமடிக டொண்டு காட்டி
யினிதமர்ந் தியற்கை வேறா யியலுமா லென்னி னென்ன
முனிவர்தம்பெருமையெம்மான் மொழியலாந்தகைமைத்தேயோ?

**ஏமநாதன்** :—இன்னும் புலிகள் கூட அவர்களுக்கு அடங்கி யிருக்கின்றன. நான் கண்ணாற் பார்த்தேன்; நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ ?

**தசரதன்** :—இஃது ஓர் அற்புதமா ? எல்லாம் வல்ல அவர்களிடத்தில் எதுதான் அடங்கியிராது ?

**ஏமநாதன்** :—அஃதிருக்கட்டும். நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ புலி மகரிஷிகளுக்குப் பணிவிடை செய்வதை ? எங்கே, சொல்லுங்கள் கேட்போம்.

**தசரதன்** :—நீ எங்கே பார்த்திருக்கிறாய் ? சொல். நான் பார்த்ததில்லை.

**ஏமநாதன்**:—என்னைச் சொல்லச்சொன்னால் சொல்லுகிறேன். தங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டால் நான் உடனே சொல்ல ஆக்ஷேபமில்லை.

**தசரதன்** :—நல்லது, நான் பார்த்ததில்லை. இதற்கு முன் ஒரு தடவையுங் காட்டிற்கு வாராத நீ எங்கே பார்த்திருக்கிறாய் ?

**ஏமநாதன்** :—என்னை இன்றைத்தினம் காலை வசிஷ்ட மகா முனிவர் ஆசிரமத்திற்கு அனுப்பினீர்களன்றோ ? அங்கேதான் பார்த்தேன்.

**தசரதன்** :—என்ன பார்த்தாய் ?

**ஏமநாதன்** :—புலி அவருக்குப் பணிவிடை செய்தது. அதைத்தான்.

**தசரதன்** :—என்ன பணிவிடை செய்தது ?

**ஏமநாதன்** :—அவருக்கு எதிரில் ஒரு கமண்டலுவில் ஜலத்தை வைத்துக் கொண்டிருந்தது. நான் பார்த்துப் பயந்து வாய் குழறிக் கூச்சலிட்டுக் கீழே விழுந்து குப்புறப்படுத்துக் கண்ணை மூடிக்கொண்டு விட்டேன். அப்பொழுது வசிஷ்டர் என் அருகில் வந்து அந்தப் புலி யொன்றுஞ் செய்யாது என்று என்னைத் தைரியப்படுத்தி யழைத்துக்கொண்டு போ

ஞர். உடனே அந்தப்புலியும் கமண்டலுவை யெடுத்துக் கொண்டு உள்ளே போய்விட்டது.

**தசரதன்** :—அடா! பேதாய்! வியாக்கிரபாதர் அல்லரோ அவர்? வியாக்கிரபாதரைப் புலியென்று பிரமித்தனையே! மூர்க்கா! அவர் ஒரு பெரியமுனிவர். உனக்கென்ன தெரியும்? பெரியோர்களை யடுத்து எப்போதாயினும் சுச்ரூஷை செய்திருந்தாலன்றோ அவர்களது தன்மை தெரியும்? ஸத்ஸாங்கத்தியமும், பூஜ்யர்களது சேவையும் சாதாரணமாய் எல்லோர்க்கும் லபிக்குமா? அதற்கு எவ்வளவு புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்! போகட்டும், யான் உன்னை அவரிடம் அனுப்பிய காரணத்தினாலாவது பெரியோர்களது தரிசனம் உனக்குக் கிடைத்ததே! நீயும் புண்ணியசாலியே! வியாக்கிரபாத ரென்பவர் நமது குலகுருவாகிய வசிஷ்டருடைய பெண்ணை மணஞ்செய்தவராவரே. இப்போது தெரிந்து கொண்டனையா?

**ஏமநாதன்** :—இல்லை, மகாராஜா! புலிதான். நான் என்னுடைய இரண்டு கண்ணினாலும் பார்த்தேனே. முனியன்று, புலிதான். சந்தேகமே யில்லை.

**தசரதன்** :—போடா! பைத்தியக்காரா! நீ நன்றாக உற்றுப்பார்க்கவில்லை. எப்பொழுதும் நீ இப்படித்தான். ஒன்றையும் நன்றாக ஆராயாமற் பேசுவது உன் சுபாவம்.—சில நாளைக்குமுன்னே அவருக்கு ஓர் ஆண் குழந்தைகூடப் பிறந்தது; அதற்கு 'உபமன்னியு' என்று வசிஷ்டர் பெயர் வைத்தனரே. நீ ஆராயாமல் ஏமாந்து போய்விட்டாய். ஏமநாதன் ஏமாறுகிறது ஓர் ஆச்சரியமா?

**ஏமநாதன்** :—மகாராஜா! நான்தான் ஏமாந்து போனாலும் என்னைப் பரிகாசங்கூடச் செய்ய வேண்டுமா? நீங்கள் ஒரு நாளும் ஏமாற மாட்டீர்களோ? யானைக் கொருகாலம் வந்தாற் பூனைக் கொருகாலம் வாராதா? அப்பொழுது தசரத மகாரா

ஜா தவறினார் என்று சொல்லிப் பரிகாசம் பண்ண மாட்டேனோ?

**தசரதன்** :—நீயொரு பெரு மூடன். உன்னைப்போல் ஒருநாளும் முனிவரைப் புலியென்று மயங்கவே மாட்டேன். இனி இந் தப்பேச்சை விடு. இந்த வனம் எவ்வளவு அழகாயிருக்கின்றது! பார்த்தனையா? நாற்புறமும் மல்லிகை முல்லைமுதலிய கொடிகள் படர்ந்து பூச்சொரிகின்றன! பார்! ஒரு புறம் யதேச்சையாய் மான்கள் பயமின்றித் துள்ளி அழகாய் விளையாடுகின்றன. மற்றொருபால் மயில்கள் தமது கலாபம் விரித்தாடி வசந்தராஜனை யெதிர் கொள்ளும் பரதமங்கையர் போற் காணப்படுகின்றன. அதோ அந்தத் தடாகத்தைப்பார்!

(பாடுகின்றான்)

ஆண்டு நீரிடைக் காண்டகு செவ்விய
பதுமா தனத்தினின் மதுமாந் தளியுடன்
றவளைகண் மூடித் தவமியற் றுநரெனத்
துஞ்சுழி யவண்வாழ் நஞ்சராக் கௌவக்
கோபம் விஞ்சிச் சாபந் தரல்போல்
வாய்விடுத் தரற்றலை யாய்வுறக் காணாய்! (உக)

அதோ அந்தத் தடாகத்தின் கரைமேல் நிற்கும் (பாடுகின்றான்)

அளவிலாக் கொன்றைகள் பளகில் பொலம்பூ
நிலனுறச் சொரிந்தே யலமரு மாதுலர்க்
குளமகிழ் தரும்பொரு ளளியுட னளிக்கும்
வண்மையோ ரொப்ப துண்மையே காணாய்! (உஉ)

இந்த அழகிய காட்சிகளைக் காணாத கண்களெல்லாம் கண்களோ? புண்களென்றே வாய் கூசாமற் சொல்லுவேன். இன்னும் ஒருசார் ஆண்டுத்தெரியும் (பாடுகின்றான்)

மலையினின் றிழிந்து வளம்பல வரன்றி
யலைகரை யுடைக்கு மருவியின் றிறனு
மதன்கரைப் பாங்க ரளவிய புதர்வயிற்
குதிகொளும் பறவையின் கூட்டமு நோக்காய்! (உங)

இதோ இந்தப் பக்கத்தில் (பாடுகின்றான்)

அளியினை மென்னு மதிதியர் தம்மை
நளிமலர் முகமலர்ந் தொளியுடன் மணமாந்
தூதரை விடுத்துக் காத லுடனழைத்
திம்பரி லறமே யெம்பிராற் கினியதென்
றுலகினை ரறிய நலமுடன் றேனினைக்
கொடுத்துப சரிக்குங் கொடிபல காணாய்! (உச)

இங்குத்திரும்பிப்பார்த்தனையா இந்த வேங்கைவிருக்ஷங்களை? இவைகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் பரத்தையர்களைப் பற்றி நினைவுண்டாகின்றது. ஏனெனிற் கூறுகின்றேன் கேள்:
(பாடுகின்றான்)

பொன்னி றத்திறற் பொறிவரி யளிகளை யழைத்தே
யின்னி தழ்க்கடி மதுவினு லெளிதினின் மயக்கி
யின்ன லுற்றுயி ரிழக்குமா றியற்றுமிவ் வேங்கை
மெய்ந்ந லத்தினை விலைசெயும் பதியிலா ரொக்கும். (உரு)

நமது தலைமேல் நெருங்கிய கொம்புகளி னிடையே பல பக்ஷி ஜாலங்களின் சிலு சிலுப்புரையும், மந்திகளின் கிறீச்சொலியும் எவ்வளவு அழகாயிருக்கின்றன! இவற்றுடன் தனி மரப் பொந்தில் ஏகாந்தமா யுறையுங் கூகையின் குழறலும் இடையிடையே கர்ணகடோரமாய்க் கேட்கின்றது. உலகவாழ்வில் இன்பமுந் துன்பமுங்கலந்து வருதற்கு இஃதோர் சாக்ஷியாய் நிற்கின்றதன்றோ?

**ஏமநாதன்:**—மகாராஜா! தங்களுக்குப் பக்ஷி மிருகங்களின் ஒலியினைக் கொண்டே அவை யின்னவை யென்று தீர்மானிக்குஞ் சாமர்த்திய முண்டென்று பல நாளும் எனக்குக் கூறியிருக்கின்றீர்கள். அதுவன்றியும் தாங்கள் சப்தவேதி சாஸ்திரம் கைவந்த காவலர் என்று பலர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன். அஃதுண்மையாய்த் தங்களுக்குத் தெரியுமென்று திருஷ்டாந்தப்படுத்தி இதுகாறுங் காட்டவேயில்லை. அங்ஙனங் காட்டற்கு இதுநல்ல சமயமென்று தோன்றுகிறது.

**தசரதன்**:—இதுகாறும் நீ என்னுடன் வேட்டைக்கு வரவில்லை. அதனாற்றான் உனக்கு அந்தச் சப்தவேதிசாஸ்திரத்தின் வன்மையைக் காட்டச் சமயம் நேரிடவில்லை. அதோ மாமரத்தின் மேல் இனிய குரலாயொன்று கேட்கின்றதே, அது குயிலின் ஓசை; அதோ தென்கிழ்த்திசையில் அடர்ந்துள்ள மூங்கிற் புதர்க்கிடையே ஒருவித உறுமுதற் சத்தங் கேட்கின்றதே, அது புலியின் குமுறல்; இதோ நமக்கு நேர் தெற்கே கூப்பிடு தூரத்திற் காணப்படும் மகிழ்மரத்தில் இருந்து ஓரோசை கேட்கின்றதே அது கரடியினொலி.

**ஏமநாதன்**:—போதும், போதும், மகாராஜா! என்ன செய்து விட்டீர்கள்! எனக்குப் பயமாயிருக்கின்றதே! புலி கரடி வசிக்குங் கொடுங்காட்டில் என்னைக் கூட்டிக்கொண்டு வந்து விட்டீர்களே! நானென்ன செய்வேன்? (உடல் நடுங்குகின்றான்.)

**தசரதன்**:—இஃதென்னை ஆச்சரியமாயிருக்கிறது! நீ இவ்விதம் பயப்படுவாய் என்று முன்னமேயே எனக்குத் தெரிந்திருந்தால் நான் உன்னை யென்னுடன் அழைத்துவந்திருக்கவே மாட்டேன். ஆயினுமென்ன? பயப்படாதே! நான் இருக்கிறபொழுது உனக்கென்னபயம்? மன்னுயிரைக்காத்தல் மன்னவன் றொழிலன்றோ? அன்றியும், உன்னுயிர் என்னுயிரன்றோ? நீ கொஞ்சமேனும் அஞ்சலை; தைரியமாயிரு.

**ஏமநாதன்**:—மகாராஜா! நீங்கள் இவ்வளவு தைரியங் கூறியும் இன்னும் என்னுடல் பதறத்தான் பதறுகின்றது. அயோத்தியில் நம்முடைய மிருகசாலையி லடைக்கப்பட்டிருக்கும் புலி கரடிகளின் ஒலிகளைக் கேட்கவே எனக்குப் பயமாயிருக்குமே! அப்படியிருக்க யதேச்சையாய்த் திரியும் துஷ்டமிருகங்களுக்கிடையே இருக்கும்பொழுது 'தைரியமாயிரு' என்றால் எப்படித் தைரியம்வரும்? மகாராஜா! என்மனம் துடிக்கின்றதே! இதற்காகத்தானே ஊரைவிட்டுக் கிளம்பும்பொழுதே நான் வரமாட்டேன் என்று சொன்னேன்.

**தசரதன்** :—அடா! பேதாய்! பெண்ணினும் பெரிய பே ஒன்றுக்கும் பயப்படாதே. ஒரு தீங்கும் உனக்கு நேரிடாவண்ணம் உன்னருகிருந்து உன்னைப் பாதுகாப்பேன். நீ என் ஆற்றலை நன்றாய் உணரவில்லை. ஆகையினாற்றான் நான் என்ன தைரியஞ் சொல்லியும் இன்னும் பயப்படுகின்றாய். நில், நில், என்னவோ வோரொலியுண்டாகின்றது.

(தசரதன் காது கொடுத்துக் கேட்கின்றான்)

**சுமந்திரன்**:—சுவாமி! நான் அயோத்திக்குத் திரும்பி யோடிப் போய்விடட்டுமோ? இந்தச் சத்தம் என்னவோபோலிருக்கிறதே! மகாராஜா! போதும், உங்களுடன் வந்தது போதும், போதும் தாங்கள் சப்தவேதி சாஸ்திரவல்லமையைக் காட்டினது. என்னவோ பெரிய ஆபத்திற்காகத்தான் என்னை யிங்கே கொண்டுவந்துவிட்டீர்கள்! திரும்பி அயோத்தி போகலாமென்றாலும் ஒன்றியாய் எப்படிப் போவேன்? மகாராஜா! அஃதென்னை? அந்தச் சத்தம் மெதுவாய்க் கேட்கின்றதே. சிங்கத்தின் கர்ச்சனையா? சிவிங்கியின் குமுறலா?

**தசரதன்**:—அந்தச் சத்தம் அதோ தெரிகிற புதருக்கு அப்புறத்தினின்றும் வருவதுபோற் காணப்படுகின்றது. அஃது அவ்வளவு தெளிவாய்க் கேட்கவில்லை. இருந்தாலும் உற்றுக் கேட்போம்.

(மறுபடியும் உற்றுக்கேட்கின்றான்)

இப்பொழுது நன்றாய்க் கேட்டது. அது புதருக்கப்புறத்திலிருக்கும் சுனையிலொரு மதயானை நீர்குடிக்கும் ஒலியென்று நினைக்கின்றேன். மறுபடியும் அதே சத்தங் கேட்டதன்றோ? அது நிச்சயமாய் யானை நீர்குடிக்கின்ற வோசைதான். சந்தேகமேயில்லை. நான் கூறியதை யுனக்கு மெய்ப்பிக்கும் பொருட்டு அச்சத்தம் வரும் வழியே ஒரு பாணத்தைப் பிரயோகித்துப் புதருக்கப்புறத்திலுள்ள களிற்றினை வீழ்த்துகின்றேன். நீபோய்ப் பிறகுபார். (வில்லை வளைக்கின்றான், பாணம் மும்முறை கீழேவிழுகின்றது.) ஈதென்ன புதுமை! பாணம் மும்முறை கை

தவறிக் கீழேவீழ்ந்ததே! ஒருவேளை நானெய்யும் அம்பு குறி தப்பிப்போமோ என்னவோ? தெரியவில்லை. இருந்தாலும் இன்னொரு முறையேனும் கணைவிடுத்து அம்மதயானையைக் கொல்கின்றேன் பார்.

(பாணப்பிரயோகஞ் செய்கின்றான். உடனே 'ஐயோ', 'அம்மா', 'அப்பா' என்ற அழுகைக்குரல் கேட்கின்றது).

**தசரதன்** :—அடா! ஏமா! அஃதென்ன சத்தம்?

**ஏமநாதன்** :—மகாராஜா! என்னவோ வகைமோசமாய்ப் பிசகு சம்பவித்துவிட்டதுபோ லிருக்கின்றதே! அதோ அந்தச்சத் தத்தைக் கேளுங்கள்.

**தசரதன்** :—அடடா! மனிதனது அழுகுரலாய்த் தோன்றுகின்ற தே! அடா! இஃதென்னமோசம்! இஃதென்னதவறு! சீக்கிரம் அங்கே போய்ப்பார்ப்போம் வா.

(இருவரும்போய்ப்புதரை நீக்கிப்பார்க்கின்றார்கள்)

**சுரோசனன்** :—ஓ! ஜகதீசா! என்ன செய்வேன்? ஐயோ! மார் பெல்லாம் நோகிறதே! ஹா! அப்பா! ஹூ! அம்மா! (இருவரும் ஒரு முனி குமாரன் அம்புதைத்துக் கீழேவிழுந்து புலம்புவதையும் ஒரு குடங் கீழேவிழுந்து கிடப்பதையுங் காண்கின்றார்கள்.) ஐயோ! நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? ஒரு பிழையுஞ்செய்யாத என்மேற் பாணம் விழுவதற்கு என்ன காரணமோ தெரியவில்லையே? நிரபராதி யாகிய என்மேற் பாணப்பிரயோகஞ்செய்ய யாருக்குத்தான் மனந்துணிந்ததோ! ஐயோ! அப்பா! நீங்கள் தீர்த்தங் கொண்டுவரப்போன புத்திரன் சீக்கிரம் அதனைக்கொண்டுவரு வான் என்று எண்ணியிருப்பீர்களே! நான் எப்படிக்கொண்டு வருவேன்? மார்பைத்தொளைக்கின்றதே! இது யமபாணந் தானோ? இந்திரனுடைய வஜ்ஜிராயுதமோ? என்னவோ தெரியவில்லையே! கண்ணில்லாத மாதா பிதாக்களுக்குப் பணிவிடைசெய்து காட்டிலுள்ள காய் கனி கிழங்குகளைப்புசி த்துப் பிழைத்துக்கொண்டு வருகிற என்பேரிலும் பாணம் போடலாமா? ஐயோ! தெய்வத்திற்கும் கண்ணில்லையோ?

சடைமுடியும் மரவுரியுந் தரித்துக்கொண்டு காட்டில் வாழும் என்னைக்கொல்வதனால் எவர்க்கேனும் கொஞ்சமாயினும் பிரயோசனம் உண்டா? அகாரணமாக என் மேல் யாரேனும் பாணம் தொடுப்பார்களா? என்னை வேடனுங் கொலை செய்யமாட்டானே. துஷ்ட மிருகங்களும் என்னைக் கண்டால் ஓடிப்போய் விடுகின்றன என்று சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தேனே! அந்தோ! யான் இறக்கின்றேனேயென்று சிறிதேனும் துன்புற்றிலேன்! ஆறிலுஞ்சாவு, நூறிலுஞ் சாவு, அஃது என்றைக்கும் உள்ளதுதான். ஆனால் கண்ணில்லாத என்தாய் தந்தையர்கள் என்ன செய்வார்கள்? அம்மா! நீயென்னசெய்வாய்? 'எனக்குப் பசிக்கிறதே கொஞ்சம் பழங் கொண்டுவந்துதா' என்று இனி யாரைக் கேட்பாய்? அப்பா! தங்களுக்குத் தாகமாயிருக்கிறதென்று சொன்னீர்களே! உங்களுக்கு இடையூறு செய்கிற மகாபாவிகளும் உலகத்தில் உண்டோ? என்னை விட்டு நீங்கள் எப்படிப் பிழைப்பீர்கள்?—ஐயோ! கண்ணை யிருட்டுகின்றதே! மயக்கம் அதிகரிக்கின்றதே! அம்மா! நான் உன்னை விட்டுப் போங்காலம் வந்து விட்டது! ஆகா! தெய்வமே! உனக்குக் கொஞ்சமேனும் இரக்கமில்லையோ?

**தசரதன்:**—(தனக்குள்) ஓகோ! பிரமகத்தியோ செய்து விட்டேன்? என்ன ஆச்சரியம்! மதிகெட்டு இப்படியும் செய்வேனோ?—சுவாமீ! தாங்கள் யார்? தமது திவ்விய சரீரத்தில் அம்பெய்த மகாபாவி நானே. இந்தச் செய்கையால் எழுமையெழு பிறப்பும் இழி நரகெய்துவேன்; சந்தேகமே யில்லை. பிராமணோத்தமா! என்மேற் கோபங் கொள்ளாது அருள் செய்யப் பிரார்த்திக்கின்றேன்—ஏமநாதா! தயை செய்து இந்த மகானுபாவனை மெதுவாய் மார்பின்மீது அணைத்துக்கொண்டு அப்படி யுட்கார்ந்துகொள்.

(ஏமநாதன் அவனைத் தூக்கி நிமிர்த்தி மார்போடணைத்துக் கொஞ்சமிப்புறம் விலகி யுட்கார்ந்து சொல்லுகின்றான்.)

சுவாமி! தாங்கள் இன்றொன்று தயை செய்து சொலலப் பிரார்த்திக்கின்றேன். இப்படிப்பட்ட மகாபாதகனை என்னைப்பார்த்துப் பேசவுங் கூடாதென்று மௌனமா யிருக்கின்றீர்களோ?—ஐயோ! யானெய்த கணை கடுநஞ்சு தீட்டப்பெற்ற கரிபோழும் அழற்கணையாயிற்றே! ஐயா! இன்னுஞ்சிறிது நேரத்தில் தாங்கள் இவ்வையக வாழ்வினை நீத்து விடுவீர்களென்பதற்குச் சிறிதேனும் ஐயப்பாடில்லை! சுவாமி! தயை செய்து வாய்மலர்ந்தருளுங்கள்.

சுரோசனன்:—ஆ! நீ ஓரரசன்போற் காணப்படுகின்றாய்! இந்தக் காட்டில் வசிக்கும் நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்? வையகங் காக்கும் மன்னரே யிவ்விதம் முறை பிறழ்வாராயின் காட்டில் அநாதையாய்ச் சஞ்சாரஞ் செய்யும் எம்போலியர்க்குக் கதியென்ன? நாட்டி லரசாளும் மன்னனது ஒளியாலன்றோ காட்டில் வதியும் யாங்கள் உய்தல் வேண்டும்?

(பாடுகின்றான்)

*"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" (உசு)

என்ற நீதியும் பொய்யோ? அதுநிற்க, வேலியே பயிரை மேய்தல்போல் அரசரே யெம்மைக்காவாவிடின் எமக்குயாரே புகலிடமாவார்?

உண்மையில்லை கோடா துலகம் பொதுநீக்கித்
தண்மையுட ளுளுந் தகைமை யிதுவேயோ? (உஎ)

நீ வேட்டையாடும் பொருட்டு இங்கு வந்திருப்பதாக உனது உடையினால் அறிந்தேன். ருஷிகளையும் ருஷிபுத்திரர்களையும் வேட்டையாடச் சொல்லி யெந்த தர்மசாஸ்திரத்திற் சொல்லி யிருக்கிறது?

தசரதன்:—சுவாமி! நான் ஆராயாமற் பாணந் தொடுத்தேன். யான் இப்புதர்க்கு அப்புறம் இருக்கும்பொழுது இந்தச்சுனை

* சீவக சிந்தாமணி.

யினிடத்திலோரொலி கேட்டேன். அஃதிதோ கிடக்கும் குடத்தில் நீர்முகந்து கீழே சொரிந்த வொலியென்றே இப்பொழுது அறிந்தேன். அவ்வொலியினை அங்கிருந்து யானை நீர் குடிக்குமொலி யென்று என் பேதைமையானும் ஊழ்வலியானும், சப்தவேதி சாத்திரம் நன்குணர்ந்திருக்கிறேனென்ற செருக்கினானும் மருண்டு கணைதொடுத்தேன். ஐயோ! கையினின்றுங் கணைதவறிய போழ்தே எனக்குத் தவறு நேரிடுமென்பதையறிந்தும் அறியாப்பேதை யானேனே! சுவாமி! என்னை க்ஷமிக்கவேண்டும். யான் அறியாமற் செய்தபிழையைப் பொறுத்தருளவேண்டும். யான் இந்தக் கோரகிருத்தியத்தைத் தெரிந்து செய்தவனல்லேன்; வேடிக்கையினிமித்தம் செய்தவனு மல்லேன். மனிதர்மீது பாணந்தொடுப்பதை ஒரு வேடிக்கையாய்க் கொள்வேனோ? இது காலவித்தியாசத்தினால் நேர்ந்த தவறு. இதனால் உங்களுக்கு உண்டாகிய துன்பம் சிறிது நேரத்தில் முடிவுபெறினும், எனக்கு உண்டாகுந்துன்பம் அளவிலடங்காது; ஜன்மஜன்மத்திற்கும் தீராது. ரௌரவாதி மகாநரகங்களில் எண்ணிறந்தகாலம் துன்பம் அனுபவிக்கும்படியான மகாபாதகத்திற்குள்ளானேனே! ஐயோ, விதியே! இந்தப்பாதகத்தின்கொடுமையைக் குறைப்பதற்கு, விப்பிரோத்தமரே! உமது கருணையைத் தவிர வேறொன்றுமில்லை. ஆதலான், தயைசெய்து பொறுத்தருளும் ஐயாவே! என்மீது க்ஷாத்திரம் வையாதீர். நீர் பிராமணோத்தமர். உமது பிராமணத்தன்மையாகிய கரையிலாக் கருணைக்கு என்னை உரியவனாக்குமின். பூவுலகில் நீர் கடைசியாய்ச்செய்யும் பேருபகாரம் இதுவேயாகும். தம்மைக்கொன்ற மாபாவியையும் மன்னித்த மாபுருஷரெனத் தமது கீர்த்தி மூவுலகினும் வியாபித்து உமக்குப் புகழை விளைக்கும். கருணாமூர்த்தியே! நீர் மன்னிக்கவேண்டும்.

குரோசனன்:—மன்னா! நீ ஊழ்வினையாற் றவறினாய். உன் மேற் பிசகில்லை. உன்முகத்திலும் சாந்த குணமே மேம்பட்டு விளங்

குகின்றது. விதியினை வெல்லல் யார்வசம்? கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே. இந்தப் பெரியோர்வாக்கியம் எவ்வெவர் விஷயத்தும் எக்காலத்தும் உண்மை.—ஆம், ஆம், இதனால் என்னைவிட உனக்கேதுன்பம் அதிகம். ஆயினும், கடந்துபோனதைப்பற்றிக் கவலையுற்றுத் துன்புறாதே. அங்ஙனம் செய்தல் தவற்றினும் தவறும். அஃதெப்படி யென்னின், தவறு என்பதை ஒரு புண்ணுக்குச் சமானமாய்க் கொண்டால், அதனைக்குறித்து அடிக்கடி சிந்திப்பது அதனைக்கிளறி ஆழப்படுத்துவதாகும்; அன்றியும், அப்படிப்பட்ட கெட்ட விஷயங்களையே நினைக்கும் பழக்கமும் மனத்திற்கு உண்டாகும். இது நன்றன்று. யான் சாந்தருணத்திற் சொல்லிய இவ்வுண்மையை உலகத்தவர் அறிய நீ வெளியிடுவாயாக. உனக்கு இது விளங்கவில்லை யெனின், இன்னுமோர் உபமானங்காட்டுகின்றேன். அஃதாவது, நாம்செய்யும் நற்காரியங்களெல்லாம் வெண்ணிறமாகிய ஒரு துகிலெனக்கொள்; நாம் செய்யுந் தவறு ஒவ்வொன்றும் ஒவ்வொரு கறுப்புப் புள்ளியாகும். இந்தத் தவற்றினை அடிக்கடி நாம் நினைப்பதனால் அந்தப்புள்ளியின் கருநிறம் கெட்டிப்படுகின்றது; நினையாதொழிவோமாயின், சிறிதுகாலத்தில் நமது நற்கருமங்களின் வெண்மை அதிகரிக்க, கரும்புள்ளி நிறங்குன்றிமாயும். அடிக்கடி அதனை நினைப்பதனால், அந்தக் கரும்புள்ளிக்கு வலிமையும் திடமும் அதிகப்பட்டு, அஃது உயிர்த்து வளர்கின்றது. மானுடமனத்திற்கு இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தியென்று மூன்று சக்திகளுள. மனத்தினைத்தவற்றின்மீது செலுத்துவதனால், இச்சாசக்தியின் விசேஷத்தினால் அதனையே அல்லது அத்தகைய தவறான விஷயங்களையே நாடு மியல்பு நமக்கு ஏற்படுகின்றது. ஞானசக்தியின் வலிமையினால் அத்தவற்றினுக்கு உயிருண்டாகின்றது. கிரியாசக்தியின் மகிமையினால் அது வளர்ந்து விவகரிக்கத் தலைப்படுகின்றது. அம்மாதிரியான காரியங்களிலேயே மனத்தினை ஆழ்த்துகின்றது. ஆதலின், தவறுசெய்தவன் அத்தவற்றினையே சிந்தித்து விசனிப்பதனாற்

பயனில்லை. இனித் தான்செய்யவேண்டியவைகளை ஆலோசித்து நற்கருமங்களை யதிகமாய்ச் செய்து தான் உய்யும் வழியைத் தேடவேண்டும். இஃதொரு பெரிய இரகசியம். இதன் உண்மையை அறிந்தவர் அரியர். ஒருநாள் என் தந்தை என் தாயாருக்கு இவ்விஷயத்தை யேதோகாரணத்தைப்பற்றி விவரித்துக் கொண்டிருந்தபொழுது நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஆதலால், அரசனே! நீவருந்தாதே. நான் பிரமகுமாரராகிய காசிபமுனிவரளித்த விருத்தசேனர் புதல்வராகிய சலபோசன மகர்ஷியின் ஒரே மைந்தன். என்னைச் சுரோசனன் என்றழைப்பார்கள். எனக்கு மயக்கம் மிகவும் அதிகரிக்கின்றது. நான் இறந்துபோகிறேனே யென்ற வருத்தம் எனக்குச்சிறிதும் இல்லை. கண்ணில்லாதவர்களும், மிகுந்த விருத்தாப்பியமானவர்களும், தமக்கு உதவி செய்வதற்கு வேறுகதி யற்றவர்களும், ஆகிய எனது மாதாபிதாக்கள் என்ன செய்வார்களோ என்றே விசாரப்படுகின்றேன். ஓ! மன்னு! நான் அவர்களுக்குத் தீர்த்தங் கொண்டுபோக வல்லவோ விங்கு வந்தேன்? வந்த விடத்தில் உன்கைக் கணையாற் றைப்புண்டு விழுந்தேனே, நான் பூர்வ ஜன்மத்தில் என்ன பாபஞ்செய்தேனே பிதாமாதாக்களுக்குப் பயன்படாமல் இறக்கின்றேன்? அந்தோ! அவர்களுக்கு யாவரே தீர்த்தங் கொண்டுபோய்க் கொடுப்பார்கள்? பல பணிவிடைகளையும் புரிந்து வந்த என்னை யிழக்கத்தானே அவர்கள் தவஞ் செய்கிறார்கள்? எனக்குப் பின் யாவரே அவரைப் பாது காப்பவர்?... அது பற்றியே என் மனம் மிக வருந்துகின்றது.—இனிமேல் அதைப்பற்றி யாலோசிப்பதிற் பயனில்லை—எனக்கு உடம்பு மிக இசி வெடுக்கின்றது.—இப்படிப் படுக்கின்றேன்.

(சுரோசனன் கீழேபடுக்கின்றான். தசரதன் தன் மடியில் அவன் றலையை வைத்துக் கொள்ளுகின்றான்)

ஓ! அரசனே! நீ எந்த நாட்டின் மன்னன்? உன் பெயரென்னை? நாங்கள் அயோத்தியையாளும் தசரத மகாராஜனுடைய

காட்டிலிருப்பதனு லெங்களுக்கு—ஒரு குறைவும் வாராதென்று நினைத்திருந்தேன்—ஐயோ! தெய்வ சம்மதத்தால்—நடந்தகாரியத்திற்கு நாமென்ன செய்யலாம்.

**தசரதன்** :—ஐயா! நான்தான் அந்தத் தசரதன் என்னும் மகா பாவி!

**சுரோசனன்** :—மகாராஜனே! யாவர்க்கு முபசாரமா யிருக்க வேண்டிய இந்தச் சரீரமானது பிறர்க்குத் தீங்கு விளைப்பதற்காகவோ எனக்குக் கிடைத்தது. அந்தோ! என்னே யிப் போலியாக்கையின் பயன்! எனக்குப் பிராணன் அதி சீக்கிரத்திற் போய் விடும்போலிருக்கின்றது.—நான் உன்னை யொன்று செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.—இந்தக் குடத்தில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு சென்று அவர்களுக்குக் கொடு. அவர்கள் தாகத்தால் மிக வருந்துவார்கள். எனது கண்ணிலாத பெற்றோர்களைக்கண்டு 'தீர்த்தத்திற்குச் சென்ற புதல்வன்—கணை பாய்ந்து—இறக்கும்பொழுது உங்களைத் தியானித்து விண்ணுலகை மேவினன்' என்று தயை செய்து சொல்லவேண்டியது. அதுதான் உன்னையான் வேண்டிக்கொள்ளுகிறது.—இதோ தெரியும் இந்தக் கொடிவழியினூடே சென்றால் என் தகப்பனாரிருக்கும் ஆச்சிரமம் போய்ச் சேரலாம்.—அம்மா! உன்பேச்சைக் கேளாமல் வந்ததன் பயன் சம்பவித்தது. என்னைவிட்டுப் பிரிந்திருப்பாயோ?—ஹா! சங்கரா! கைலாஸநாதா! (கண்ணை மூடி மூர்ச்சையாகின்றான்)

**தசரதன்** :—என்ன காரியஞ் செய்தேன்! மனிதன் தவறு செய்யவே யிவ்வுலகி லுற்பவிக்கின்றனனோ? ஊழ்வினையின் வலியையாவரே வெல்வார்? அயோத்தியை விட்டுப் புறப்படுங்கால் இவ்விதம் சம்பவிக்குமென்று கனவிலு மெண்ணினேனல்லேன். சற்று நேரத்தின்முன் வாலிய தசையில் முதிர்ந்து விளங்கிய அழகுடை யந்தணர் குமாரனும், அந்தோ தானிறந்து படுவே னென்றெண்ணினனோ? அவன் தாய் தந்தை

யர்கள் கண்ணில்லாதவ ரென்றும் அவர்களுக்கு இவன் ஒருவனே புதல்வனென்றும் அறிந்தேனே! அவர்கள் கதி யென்னாகும்? முனிவனை யானை யென்று மயங்கிய என்னிலும் மூடனொருவனுளனோ? வாமநாதன் முனிவனைப் புலி யென்று நினைத்ததைப் பரிகசித்ததற்குத் தெய்வம் இப்படிச்சோதித்து விட்டதே. நிரபராதியைக் கொன்ற பாவம் என்னை யெளிதில் விடுமோ? ஐயோ! எனதுடலையும் பாவ மூட்டையையும் வரவர வளர்த்து வந்த என்னிலும் பேதையர் இந்நிலவுலகத்துளரோ? மநு நீதி பிறழ்ந்து செங்கோனிலை தவறிக் கொடுங்கோன் மன்னன் வாழ்வதிலும் உயிர் நீத்தலே மேல். நிரபராதியான அந்தண குமாரனைக் கொன்ற பிரமகத்தி தோஷத்திற்குக் கழுவாயுமுளது கொலோ?

(இரங்கிப்பாடுகின்றான்.)

பொன்னை மாதைப் பூமியையான்
 பொருளா மயங்கிப் புரையுடலை
யென்ன தென்ன வெண்ணுநனி
 யிழிந்த மனப்பேய்க் கோட்பட்ட
வென்னை யின்னு மேங்கவிவ
 ணின்னற் கடல்வாய் விடுத்தலிசை
மன்னு பருளோ மாதவர்கண்
 மனக்கோ யிலின்வாழ் வானவனே! (உஅ)

இனிமேல் உலகத்திற் பெரும் பழி பெற்று யாவரானும் நிந்தனையுற்று வாழ்வதினும் இறத்தலே நன்று. ஆபத்பாந்தவா! எனதுயிரை யுன்னிடஞ் சேர்த்துக்கொள். (இரங்கிப்பாடுகின்றான்)

அன்றமரர் போற்றிசைப்ப வாலமமு தாக்கியபொன்
மன்றமரும் வள்ளா அல் வான்வீ டுதவுதியோ
மன்றமரும் வள்ளா அல் வான்வீ டுதவுதியேற்
றுன்றியவென் பாவச் சுமைவிடுத்தின் பந்திளைப்பேன். ()

(தனதுடைவாளை யுருவித் தன் கழுத்தை யறுக்க வோச்சுகின்றான்.)

**வாமநாதன் :—** (திடீரென்று பாய்ந்து தசரதனுடைய கையைப்பிடித்துக் கொள்ளுகின்றான்)
இஃதென்ன மகாராஜா! என்னகாரியஞ் செய்யத் துணிந்து

விட்டீர்கள்? இப்பொழுதுதான் ஆராயாம லொருகாரியஞ் செய்து அந்தணச் சிறுவனை யந்தகனூரி லனுப்பினீர்கள்? மறுபடியும் ஆராயாமல் தற்கொலைபுரியத் துணிந்தீர்களே! பிரமத் துரோகியானதோடும் ஆத்மத்துரோகியுமாகப் பார்க்கின்றீர்களோ?

**தசரதன்:**—ஏமா! எனது கையைவிடு! இன்றே லுன்னுயிரையும் போக்கி என்னுயிரையும் மாய்ப்பேன்.

**ஏமநாதன்:**—(கையை விட்டுத் தசரதன் பாதத்தில் விழுகின்றான்.) சுவாமி! அடியேன் சொல்வதைச் சிறிது கவனிக்க வேண்டும். கிடைத்தற்கரிய மானுட சரீரத்தை யவமாகக் கமரிற் கவிழ்த்தபால் போலாக்குதல் நியாயமோ? கடவுளாற் கொடுக்கப்பட்ட சரீரத்தை அவரே யெடுத்துக் கொண்டாற் கொள்ளலாமே யன்றி நாமாக அதனைக் கெடுத்து விடுதல் எவ்வாறு நேரிதாகும்? கோபமிகுதியால் ஆராயாமல் தீச்செயல்களை யொன்றன்மே லொன்று யியற்றிப் பாபத்தையும் பழியையும் கொள்ள யாவரே விரும்புவார்? தாங்கள் தற்கொலை செய்து கொள்வதனால் முன்செய்தபாவந் தொலையுமா? பாவம் மேன்மேல் வளருமேயொழியக் குறையாதே! இதுநிற்க. இறந்துபோன சுரோசனன், தான் இறக்குமுன், வேண்டிக்கொண்ட காரியத்தையேனுஞ் செய்து முடித்தீர்களா? தங்களது கையாலிறந்த அவனது உடற்பாரம் கண்ணெதிரில் விழுந்துகிடக்கவும் அவனதுவேண்டுகோளை முற்றுவியாது இறந்தால் தங்களது வாய்மையென்னும்? அதோ கீழேவிழுந்து நீரினாலும் அரத்தத்தினாலும் பூசுண்டு மிகவும் பரிதபிக்கத்தக்க நிலையில் விழுந்து கிடக்கும் அந்தச் சவம் திடீரென்று தன் வாய் திறந்து 'ஓ! தசரத சக்கிரவர்த்தியே! எனக்கு உன்னானேர்ந்த இறுதிக் காலத்தில் உறுதி மொழியாகக் கூறியதை மறந்து உன் சீவனை மாய்த்துக்கொள்ளல்தகுமோ?' என்று கேட்டால் நீங்கள் யாது செய்வீர்கள்?

**சுரோசனன்:**—ஹா! ஐயோ! தசரத சக்கிரவர்த்தியே! நான் சொன்னதை மறக்கவேண்டாம். அவர்களுக்குச்சீக்கிரத்தில் தண்ணீர் கொண்டுபோ. அலக்ஷியஞ் செய்யாதே. நீயே போய் அவர்களைப் பொறுத்தருளுமாறு கேட்டாலொழிய அவர்களுடைய சாபாக்கினியுன்னைப் பிடித்தெரிக்கும். அரகர! அரகர! அரகர!
(கண்ணை மூடிவிடுகின்றான்.)

**தசரதன்:**—(நடுங்குகின்றான்) சுவாமி! அப்படியே செய்கின்றேன். ஐயோ! ஏமநாதா! நானென்ன செய்வேன்? அருமைத் திருமகன் இறந்தானென்று அவர்களுக்கு எப்படி வாய் கூசாமற் சொல்லுவேன்! இத்துன்ப மடைவதற்கோ நான் உலகிலுற்பவித்தேன் புதல்வனிறந்தானென்றுகேட்டால் அவர்களென்ன துன்பமடையமாட்டார்கள்? அந்தோ! புத்திர சோகம் மிகவும் பொல்லாதாயிற்றே. கோபத்தால் என்னை நீறாக்கிப்போடுவார்களே! மீளா நரகிற்காளாகுமாறு சபிப்பார்களே! சாபானுக்கிரக சாமர்த்தியமுடைய முனிவர்களுடைய வாக்கு ஒருநாளும் பழுதாகாதே! (பாடுகின்றான்.)

கண்ணிரண்டு மின்றிக் கலக்கமுறு நற்றவரை
யண்ணியந்தோ வந்த மரும்புதல்வ னத்திரத்தான்
விண்ணடைந்தா னென்று வெருவா துறைவதெங்ஙன்
பண்ணவர்கள் போற்றும் பரஞ்சுடரே கூறுதியால். (௩0)

ஏமா! இப்பொழுது எனக்கொன்று புலப்படுகின்றது. இறந்துபோன சுரோசனனது பிதாவாகிய சலபோசனரைக் கண்டு வணங்கி இவ்விஷயங்களைக் கூறி ஒருவாறு தேற்றிச் சுரோசனனுக்குப் பிரதியாக என்னைப் புதல்வனாகப் பாவித்துக் கொள்ளுமாறு வேண்டி அவர்களுக்கு எந்நாளும் பலவிதமான பணிவிடைகளைச் செய்துகொண்டு அவர்களோடுகூடவே யிருக்கத் தீர்மானித்துவிட்டேன். நானிங்கேயே இருந்துவிடுகின்றேன். நீ அயோத்திக்குப் போகலாம். எனக்கு இராச்சியமும் வேண்டாம், கிரீடமும் வேண்டாம். (கிரீடத்தைக் கீழே யெறிகின்றான்.) (பாடுகின்றான்.)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

நாடு வேண்டேன் நகர்வேண்டே
னண்ணு மாடந் தான்வேண்டேன்
றேடற் கரிய பொருள்வேண்டேன்
சிவிகை முதலா யினவேண்டே
னூடு மினிய வழகுடைய
நங்கை மாரின் பழும்வேண்டேன்
வீடு மற்றும் விழைவதொன்றும்
வேண்டேன் வேண்டேன் வேண்டேனால்? (௯௧)

**ஏமநாதன்:**—இவ்வாறு புலம்பி யென்செய்வது? முனிவருக்குத் தீர்த்தம் கொண்டுபோகவேண்டாமா?

**தசரதன்:**—ஏமா! நீ தயவு செய்து கொஞ்சநேரம் இங்கிருந்து இந்தக் களேபரத்தைக் காப்பாற்றிக்கொண்டிரு. நான் முனிவரிடம் போய் அவர்களுடைய துன்பத்தை மாற்றி யொருவாறு தேற்றிவிட்டுச் சீக்கிரத்தில் வந்துவிடுகின்றேன். அது பரியந்தம் நீ இங்கிரு. நான் வந்தவுடன், 'நீ அயோத்திக்குப் போகலாய். மந்திரி சுமந்திரனிடத்தில், நீ அரசனை யினிக்காணமாட்டாய்' என்று சொல்லிவிடு. இதோ நான் இக்குடத்தில் நீர் முகந்து செல்கின்றேன் 'நீ இந்தக்களேபரத்தை அந்த மரத்தடியில் வைத்துக்கொண்டிரு. (தசரதன் குடத்தில் நீர் முகந்து கொள்ளுகின்றான்)

**ஏமநாதன்:**—மகாராஜா! என்னை ஒன்றியாக விட்டுவிட்டுப் போகிறீர்களே. சீக்கிரம் வந்துவிடுங்கள்.

(ஏமநாதன் களேபரத்தை யெடுத்துப்போதல்.)

**தசரதன்:**—பயப்படாதே! போய்வருகின்றேன்.

(தசரதன் குடமெடுத்து மற்றொருபாற் போகின்றான்)

# மூன்றாங் களம்.

இடம்: ஆச்சிரமவாசல்.
காலம்: பிற்பகல்.
பாத்திரம்: சலபோசனர்.

**சலபோசனர்:**—(கையிலிருக்குந் தடியால் தட்டித்தட்டி வழிதேடிக்கொண்டு வருகின்றார்.) அடே! அப்பா! குழந்தாய்! என்கண்ணே! நீபோய் வெகு நாழிகையாய் விட்டதடா! உன்னை யெங்கே யென்று தான் தேடுவேன்? அப்படிக் தேடுவேன் என்றாலும் இரண்டு கண்ணும் புடலம் பூவாயிருக்கின்றனவே! அடா! என் கண்மணியே! நான் கஷ்டப்படுவதற்காகவேனும் வரமாட்டாயா? சீக்கிரம் வந்து விடடா. (இருமுகின்றார்.) என்னா லுன்னைக் கூப்பிடவும் முடியவில்லையே! நான் என்ன செய்வேன்?

(உள்ளிருந்து சுசீலை யெழுந்து வெளிவருகின்றாள்.)

**சுசீலை:**—சுவாமி! குழந்தை வந்துவிட்டானா? என் கண்மணி தீர்த்தங் கொண்டுவரப்போய் வெகு நாழிகையாய் விட்டதே! இன்னும் வரவில்லையோ? அடே! சுரேசனா! அப்பா! குழந்தாய்!—இங்கே யென்னசெய்கிறீர்கள்? யாரையோ கூப்பிட்டதுபோலேயிருந்ததே!—நான் உள்ளேபடுத்துக்கண்ணயர்ந்தபோது ஒரு கனாக் கண்டேன்; அதன் பலனைக் கேட்கலாமென்று உங்களிடத்தில் வந்தேன். என் கண்மணி இன்னும் வரவில்லையே! ஐயோ! இதற்கென்ன செய்கிறது? கால் சறுக்கிச் சுனையில் விழுந்து விட்டானோ? புலி கரடிகட்குப் பயந்து மரத்தின் மேலேறிக் கொண்டிருப்பானோ? அவனையார் தேடிப்போவார்கள்? ஐயோ! நமக்குக் கண்ணவிந்திருப்பதனோடு யாருமற்ற பாவியராகவும் நாம் இருக்க வேண்டுமா? சுவாமி! கொஞ்சம் உரத்துக் கூப்பிடுங்கள். ஒருவேளை சலத்திற் குதித்துக் கொண்டிருக்கும் மீன்களையாயினும் பார்த்துக் கொண்டு நின்று விட்டானோ? சலத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறானோ? ஒருவேளை நம்முடைய சத்தங் கேட்டால் ஓடி வந்து விடுவன்! என்ன செய்வேன்?

**சலபோசனர்** :—என்னடி! சுசீலே! அவன் ஒரு நாளும் இவ்வளவு நாழிகை தாமதித்தது இல்லையே! அவனைத்தான் வாயோயாமற் கூப்பிட்டுக்கொண்டு நிற்கின்றேன். மேலும் எங்கிருந்தோ ஓர் அழுகைக் குரலும் கேட்டது. எனக்கு இன்னது செய்கிறதென்று தோன்றவில்லை. அஃதிருக்கட்டும். நீ என்ன கனவு கண்டாய்? அதைச் சொல். கேட்போம்.

**சுசீலை** :—இதோ சொல்லுகிறேன். அது வெகு வேடிக்கையானது. 'எனக்குத் திடமென்று கண்தெரிந்தது. அப்பொழுது என்முன் கல்யாணமுருக்கம் பூப்போற் சிவந்த நிறமுடைய தேரொன்று ஓடிக் கொண்டிருந்தது. அதன்மேல் நம்முடைய குழந்தை சுரோசனன் இராஜாவைப்போல் வஸ்திராபரணங்கள் தரித்திருந்தான். அதைப் பார்த்தவுடனே நான் அவனைக் கூடத்தொடர்ந்தோடி அவனைக் கூவியழைத்து என்னையும் அப்பாவையும் விட்டு நீ யெங்கே போகிறாய் என்று கேட்டேன். அதற்கவன் நான் முன்னே போகிறேன்; நீங்கள் சீக்கிரத்திற் பின்னே வருவீர்கள் என்று சொன்னான். அந்தத் தேரும் வெகு வேகமாய்த் தெற்கே ஓடிப்போயிற்று'. உடனே நீங்கள் யாரையோ கூப்பிடுவதுபோற் கேட்டு நான் விழித்துக்கொண்டேன். இதுதான் நான் கண்ட கனவு. அது கண்டதுமுதல் எனக்கு மார்பும் படபடவென்று துடித்துக் கொண்டிருக்கிறது.

(தசரதன் குடத்தில் நீர் எடுத்துக்கொண்டு வருகின்றான்.)

**சலபோசனர்** :—இது நல்ல கனவென்று எனக்குத் தோன்றவேயில்லை. நமது குழந்தை யேன் இன்னும் வரக்காணோம்? ஏ! குழந்தாய்! சுரோசனா!

**சுசீலை** :—இதோ! யாரோ வருவதுபோற் காலடிச்சத்தம் கேட்கிறதே! என் கண்மணி! சுரோசனா! நீ போய் வெகு நாழிகையாய் விட்டது. இது பரியந்தம் யாது செய்துகொண்டிருந்தாய்?

**சலபோசனர்** :—அப்பா ! குழந்தாய் ! உனக்கு எங்கள்பேரிற் கோபமேதேனுமுண்டோ ? இவ்வளவு நாழிகையா யென்ன செய்தாய்? ஜலத்தில் விளையாடிக்கொண்டிருந்தனையோ ? உன் தாயாருக்காகவேனும் நீ முன்னமேயே வந்திருக்கலாகாதா ? போனது போகட்டும். இப்படிவா. என் மடியிலுட்காரு. எனக்குப்பிறபாடு தீர்த்தம் தரலாம். எங்களிருவருக்கும் நீயன்றேகதி ! என் கண்ணிற் கண்ணே ! என் கிட்டவா.

(இருவரும் கீழே யுட்கார்ந்து கொள்ளுகின்றனர்.)

**சுசீலை** :—என் குழந்தாய் ! நீயேன் வாயைத்திறந்து ஒரு மொழியும் பேசவில்லை ? உடம்பு களைத்திருக்கிறதோ ? ஏன் இத்தனை நாழிகை விளையாடினாய் ?

**தசரதன்** :—(தனக்குள்)ஐயோ ! சுரோசனன் சொன்னபடியே மிக்க விருத்தாப்பியர்களா யிருக்கின்றனர் ! இரண்டு கண்ணுமிவர்களுக்கில்லையே ! ஆகா ! கொஞ்சமும் பலமில்லாதவர்களாய் எப்பொழுதும் புதல்வனையே ஸ்மரித்துக் கொண்டிருக்கின்றனர் ! அவன் வரவையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனரே! அவனிறந்தானென்ற சொல்லைக்கேட்கப் பொறுப்பார்களோ? மிகப்பரிதாபமான நிலையிலிருக்கின்றார்களே !

(பாடுகின்றான்.)

அந்தோ விருபுடைய மார்ந்த சிறகிழந்து
நொந்த பறவையெனு நோக்குறுமிந் நற்றவர்க்கும்
மைந்தனிறந் தானென்றென் வாயா லியம்புவனோ ? (கூஉ)

**சுசீலை** :—என் கண்ணே ! நீ யென்ன செய்கிறாய் ? என்கிட்ட வர மாட்டாயோ ?

**சலபோசனர்** :—இப்படிவா. என்னைக் கட்டிக்கொள்.

**தசரதன்** :—(கிட்ட வருகின்றான்.) சுவாமி ! தங்களுக்கும் தங்களுடைய தேவிக்கும் தீர்த்தங் கொண்டு வந்திருக்கின்றேன்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

**சலபோசனர் :—** நீயார்? நீ யேன் தீர்த்தங் கொண்டுவந்தாய்? என்குமாரனெங்கே?

**சுசீலை:—** என்னடா அரோசனு? அப்பாவோடு விளையாடுகிறதற்கு இதுதானு சமயம்? நாங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற பொழுதுதானு நீ பரிகாசம் பண்ணவேண்டும்? பரிகாசம் பண்ணுகிற வழக்கமுனக்கு இல்லவேயில்லையே. இப்பொழுது எதற்காக வேறு யாரோ ஒருவன் பேசுகிறதுபோற் பேசுகிருய்? யார்மேலுனக்குக் கோபம்?

**தசரதன் :—** (அவர்கள் பாதத்தில் விழுந்து எழுந்து நிற்கின்றான்.) சுவாமி! நான் அயோத்தி மன்னனாகிய தசரதன். இந்தக்காட்டிற்கு வேட்டையாட வந்தேன். இந்தக்காட்டிலே தங்களுடைய குமாரன் ஒரு செங்கழு நீர்ச்சுனையில் தீர்த்தமெடுக்க வந்தான்.

**சுசீலை :—** அவனுக்கென்ன சம்பவித்தது?

**சலபோசனர் :—** ஓ! அரசனே! தயைசெய்து சீக்கிரஞ் சொல்லு.

**தசரதன் :—** ஓ முனீந்திரா! தேவரீருடைய புத்திரன் தன்னுடைய குடத்தில் ஜலத்தை மொண்டு கீழே சொரிந்த வோசையைத் தூரத்திற் புதரால் மறைப்புண்டிருந்த யான் யானை நீர் குடிக்குமொலியென்று விதிவலியால் மயங்கினேன்.

**சுசீலை :—** என் கண்ணே! உனக்கென்ன சம்பவித்தது?

**சலபோசனர் :—** மயங்கி?—என்ன சம்பவித்தது?

**தசரதன் :—** சப்தவேதி சாஸ்திரம் நன்கு தெரியும் என்ற கருவத்தினுல் யானையின்மேல் விடுவதாகப் பாணப்பிரயோகஞ் செய்து விட்டேன்.

**சுசீலை :—** ஆ! என் கண்மணி!

(கீழே விழுந்து விடுகின்றாள்.)

**சலபோசனர் :—** அவன் இன்னும் உயிரோடிருக்கின்றானு? சீக்கிரத்திற்சொல்.

**தசரதன்** :—உடனே தங்கள் குமாரனுடைய ஒலியினைக்கொண்டு மனிதனென்றெண்ணி ஓடோடிவந்து பார்த்தேன். ஆராயாமற் செய்த காரியத்திற்காக மனம் நொந்தேன். நிரபராதியாகிய தங்கள் புதல்வனைக் கொலைசெய்த மகாபாவியாகிய நான் உயிரோடிருத்தலினும் இறத்தலே மேல் என்று துணிந்தேன். தங்கள் புதல்வன் என்னை நோக்கித் தாங்கள் தாகத்தினால் வருந்துகிறீர்களென்று சொல்லித் தான் அந்திய காலத்தில் தங்களிருவருடைய பாதாரவிந்தங்களையே ஸ்மரித்து உயிர் துறந்ததாகச் சொல்லுமாறென்னை யனுப்பினான். மகாபாதகனாகிய யான் தங்களுடைய புதல்வனுக்குப் பிரதியாகப் பணிவிடை செய்கின்றேன். யான் இராஜ்ஜியம் முதலிய யாவும் வேண்டேன். தங்களுக்குக் குற்றேவலே புரிவேன். நான் ஆராயமற் செய்த பிழையைப் பொறுத்தருள் புரியப் பிரார்த்திக்கின்றேன். (வணங்குகின்றான்.)

**சலபோசனர்** :—அடா! மைந்தா! என்னை விட்டுப் பிரிந்தாயோ? இறந்தாய் என்று கேட்டும் இன்னும் உயிரோடிருக்கின்ற என்னினுங் கன்னெஞ்சருளரோ? என்னைக் காட்டிலும் மகாபாவியும் உலகி லிருக்கின்றனரோ! இதற்கோ உன்னைப்பெற்றேன்?—சசீலே! நீயும் பாவியானாய்! கண்ணிணையை யன்றிழந்தோங் கண்மணியை யின்றிழந்தோம். ஐயோ! மைந்தா! நாங்களும் இதோ உன்னுடன் வருகின்றோம். நாங்கள் உன்னை விட்டுச்சிறிது பொழுதேனும் பிரிந்திருப்போமா?—ஓ! மானுடப்பதரே! பரமசண்டாளா! மகாபாதகா! அடே பிரஷ்டா! துராத்துமா! என் புதல்வன் உனக்கு என்ன தீமை செய்தான்? உன்னை விடுமோ இந்தப்பிரமகத்தி? இந்தத்தோஷம் அநேக ஊழிக்காலமளவும் இரௌரவாதி நரகங்களிற் கிடந்து நீ தவித்தாலும உன்னை விட்டு விலகாது விலகாது. எங்கள் வயிறெரியக் கண்டவுன் மனமென்ன கல்லா?—

**தசரதன்** :—சுவாமி! தபோநிதே! கருணாகரனே! கிருபை செய்யவேண்டும். ஏழை யேன்மேற் கோபங் கொள்ளக்கூடாது.

**சுசீலை** :—என்னருமைக் கண்மணி! என்னை விட்டுப்பிரிய உனக்கு மனமும் வந்ததோ? எங்களை அடியோடே மறந்தாயோ? என் கண்ணே! அநேகமாயிரம் அரசர்கள் பணிவிடை செய்தாலும் உனக்குச் சமானராகச் செய்வார்களோ? என் கண்ணே! என் காதிற்கினிய மழலைச் சொற்களை அமிர்தம்போற் சொல்வாயே! இனிமேல் நான் அவற்றைக் கேட்கும் பாக்கியமடைவேனோ? அடே தசரதா! நாங்கள் ஒரு குற்றமுஞ் செய்யாதவர்களே. எங்களை யேன் இப்படிப்பட்ட கஷ்டத்திற் குள்ளாக்கினாய்?

**தசரதன்** :—ஐயோ! தெரியாமற் செய்துவிட்டேன்! தாயே! பிழை பொறுத்தருளவேண்டும்.

**சலபோசனர்** :—எங்களைப் புத்திரசோக சாகரத்தில் அமிழ்த்திய கடும்புலி யொத்த கொடுங்கோன் மன்னவ! நீயே நேராக வந்து இந்தத் துக்ககரமான செய்தியைக் கூறாமற்போயிருப்பாயானால் உன் தலை பதினாயிரம் பின்னமாக வெடித்துச் சிதறுண்டிருக்கும். என் மகனைக் கொலைசெய்தவன் திரிலோகாத்திபத்தியம் வகித்த தேவேந்திரனே யெனினும் அவனும் அழிந்திருப்பான். நீ நேர் நின்று செய்த குற்றத்தை யொப்புக்கொண்டு பொறுத்தருளுமாறு வேண்டிச் சரண மடைந்தமையினாற் றப்பினாய். இன்றேல் என்னாகும் உன்கதி? மேலும் அறியாமற் கொன்றமையால் நீ இன்னும் பிழைத்திருக்கின்றனை. அறிந்து செய்திருப்பாயாகில் இந்த க்ஷணத்திலேயே இக்ஷ்வாகு மகாராஜன் குலம் மூலதோஹானியாய்ப் போயிருக்கும். இதற்குச் சந்தேகமேயில்லை.—எது எவ்விதமாயினும் என் குழந்தை யிறந்தனனே! அவன் எந்த இடத்தில் விழுந்து கிடக்கின்றனனோ? பாணந்தைத்த வாயினின்றும் பெருகி யோடிய இரத்த வெள்ளத்தினிடைத் தெப்பக் கட்டையெனக் கிடக்கின்றனனோ? ஆகா! மைந்தா! உன் கதி யிப்படியா முடிந்தது? ஓ! தசரதா! இப்பொழுதே என்

புதல்வனிறந்துகிடக்கும் இடத்தில் எம்மைக் கொண்டுபோய் விடு. அடா! சுசீலை! எழுந்திரு. அவனுடலையேனுந் தழுவிக் கொள்வோம். சுரோசனே! நீ புண்ணியவான் என்பதற்குச் சந்தேகமேயில்லை. உன்னுடைய சடைமுடியும் மரவுரியும் உன் மார்பினின்றும் பாய்ந்த குருதியில் நனைந்து கிடக்கின்றனவோ? (சுசீலை யெழுந்திருக்கின்றாள்.)

**சுசீலை** :-(பாடுகின்றாள்)

ஐயோ வருமருந்தே யாருயிர்நீ போக்கியது
பொய்யோ புகலாய் புரைதீர்ந்த புண்ணியனே! (௯௩)

சுவாமி! நான் உங்கள் கையைப் பற்றிக்கொண்டு கூடவருகின்றேன். என்னை மெதுவாய் அழைத்துப்போங்கள்.

**சலபோசனர்** :—தசரதா! நீ மகா பாபாத்துமாவாகையால் என்னைத் தொடாதே. இதோ இந்தத் தண்டத்தின் மறுநுனியைப் பற்றி யழைத்துப்போ.

(தசரதன் இருவரையும் அழைத்துப்போகின்றான்).

## நான்காங் களம்.

இடம் : காடு.

காலம் : பிற்பகல்.

பாத்திரம் : ஏமநாதன்.

**ஏமநாதன் :**—தெய்வச்செயலை யென்னென்று சொல்லுகிறது? எவ் விதத்திலும் தவறாத மன்னனும் தவறினான்! ஊழ்வினையின் பயனை யாவரே விலக்கற்பாலர்? பாவம்! தசாதர் என்ன செய்கிறாரோ? முனிவரிடத்தில நடந்ததைச் சொல்லுகிறாரோ? அன்றி இங்குத் தற்கொலை புரிய யத்தனித்ததுபோலத் தனியிடத்திற் பிராணனை மாய்க்கத் துணிந்தனரோ? ஐயோ! அவரைத் தனியேவிட்டது பிசகு என்று தோன்றுகிறது. ஒருவேளை முனிவர் சங்கதியுணர்ந்து மன்னனைச் சாம்பராகச் சபித்தனரோ? எதற்கும் மன்னனைவிட்டு நான் தனித்தது தவறுதான். சீக்கிரத்தில் வருகிறேன் என்று போனவர் இன்னும் வரவில்லையே! என்ன ஆச்சரியம்! தசாதர் இராஜ்ஜிய பாரத்தைத் துறந்து காட்டில் முனிவருக்குப் பணிவிடை செய்யத் தீர்மானித்து விட்டாரே! அயோத்தி என்ன பாவஞ் செய்ததோ? நாம் என்ன செய்வது? எல்லாந் தெய்வச்செயல்.—ஓ! அதென்னை! யாரோ சிலர் வருவதுபோற் சத்தங் கேட்கின்றதே!

*(தசாதன் சலபோசனரையும், சுசீலையையும் அழைத்து வருகின்றான்.)*

**தசாதன் :**—ஓ! முனீந்திர! இதோ படுத்திருக்கின்றான் உங்களது ஆவி நீத்த புதல்வன்.—தெய்வமே! நானெந்த வேளையி லயோத்தியை விட்டுப் புறப்பட்டேனோ? இவற்றையெல் லாங் கண்டு துன்புறவோ நான் பிறந்தேன்?

*(தசாதன் சுரோசனனுடைய உடலைத்தூக்கிச் சலபோசனர் சுசீலையிவர்கள் முன்னிலையில் வைக்கின்றான்.)*

**சுசீலை :**—அடே! மைந்தா! என்னருமைக் கண்மணியே! தூங்கு கிறாயோ? ஐயோ! நீ யிறந்துபோனதாக இந்த அரசன்

பொய் சொல்லுகிருனே? அம்மா என்று என்னைக் கூப்பிடு! என் குழந்தை பேசவேயில்லையே! நிச்சயமாய் இறந்துபோய் விட்டான். நானென்செய்வேன்? அடே! குழந்தாய்! நான் படுங்கஷ்டத்திற்காகவேனும் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டாயா? ஓ! ராஜனே! நீயோ என் புத்திரனுக்கு எமனானாய்? நீ அவனைக் கொன்றதற்குத் தெய்வமும் சம்மதித்ததே! இன்னும் பால் மணம் நீங்காத வாயினையுடைய பசுங்குழவி பட்டானே! காட்டிலிருக்கும் வனதேவதைகாள்! நீங்களும் என் அருமைக் கண்மணியை விட்டு வீட்டீர்களே! அம்மா! கௌரி! நான் அவனைக்காப்பாற்ற வேண்டு மென்று உன்னைப்பிரார்த்தித்தேனே; நீயும் அவனை அநியாயமாய் விட்டு விட்டாயே!

**கலபோசனர்** :—அப்பா! சுரோசனு! நீ வழக்கமாய் என்னைக்கண்டவுடன் நமஸ்காரம் செய்வாயே! இப்பொழுதேன் செய்யவில்லை? ஐயோ! தூங்குகின்றயோ? வெறுந்தரையிற் படுத்துக்கிடக்கின்றனையே! எழுந்திரு! என்னிடத்திற் பேச இஷ்டமில்லாமற்போனல் உன் தாயோடாயினும் பேச மாட்டாயா? தேனினுமினிய கானம் பொழிவாயே! எங்கே இரண்டொரு வார்த்தையாயினும் பேசு! அதனலாயினும் நான் சந்தோஷமடைகின்றேன். நீ இப்படியிருந்தால் எங்களுக்கு யார் பணிவிடை செய்வார்கள்? கையற்றுக்கிடக்கும் எங்களுக்கு யாவர் காய் கனி கிழங்குகள் தேடி யன்புடன் கொடுப்பார்கள்? உனக்கென்ன காரணத்தினல் இந்த அகாலமரணம் சம்பவித்தது? நானும் உன்னுடன் யமலோகம் வந்து யமதர்மராஜனைக்கண்டு உன்னை யெனக்குத் தானஞ்செய்யுமாறு கேட்கின்றேன்; அவர் எனக்கு இல்லை யென்னது தானஞ்செய்வார்; அப்பொழுதுதான் சந்தோஷத்தை யடைவேன்! அடே! புத்திரா! நீமாத்திரம் எங்களைத் தனியே விட்டுப்போகலாமா? இது நீதியா? எல்லாந்தெரிந்த உனக்கு இஃது ஏன் தெரியாமற் போய்விட்டது? ஒரு பாபமுமறியாத என் புத்தி

ரனை யுயிர்போக்கிய நிருபாதகமா! நீ ஏழேழ் பிறப்பும் தீரா கெய்துவை. ஓ! நீயும் மன்னனா? உன்னுடைய ஆஜ்ஞையில் அகால மிருத்தியு சம்பவிக்கலாமா? உனக்கு வெட்கமில்லையா? நீயே கொன்றனையே! ஓ! அநீதியும் அக்கிரமமுமணிகலனாப்பூண்ட புல்லிய! நீ அரசன் குணத்தை விடுத்து அரக்கன்றொழிலைக் கைக்கொண்டனையே! எங்கள் குருத்துக் குழந்தையைக் கொன்று எங்களைத் தீராத் துயர்க்காளாக்கிய பரமபாதகா! உன்னை யென் சாபாக்கினியால் தகித்து விடட்டுமா?

**ஏமநாதன்** :—சுவாமி! தபோநிதியே! அடியேன் செய்யும் விண்ணப்பத்தைச் சற்றுச் செவிசாத்தி யருளப் பிரார்த்திக்கிறேன்.

**சலபோசனர்** :—நீ யார்?

**ஏமநாதன்** :—சுவாமி நான் தசரத சக்கிரவர்த்தியுடன் வேட்டையாட வந்தோன். என் பெயர் ஏமநாதன். மன்னனைப் பாணப் பிரயோகம் பண்ணும்படி செய்த பாதகன் நானே! என்னையே சபித்து விடுங்கள். தங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்று மில்லை.

**சலபோசனர்** :—ஏமநாதா! நீ யேன் குறுக்கே விழுகின்றாய்?

**ஏமநாதன்** :—சுவாமி! கிருபாசாகரமே! தயை செய்ய வேண்டும். சமுத்திரம் பொங்கி யலைவீசுமாயின் அதற்குப் பூமி யொரு பொருட்டா? தாங்கள் கோபித்தால் திரிலோகமும் நிலைபெறுமோ? முனிவருடன் எதிர்க்கும் வல்லமை மும்மூர்த்திகட்கும் இல்லை யென்றால் தசரதரால் முடியுமோ? வசிஷ்ட முனிவரை யெதிர்த்த காதிமைந்தன் போன விதம் என்ன? அகத்தியரை யெதிர்த்த சுந்தன் என்னும் கந்தருவன் அடைந்த கதியாது? பரசுராமனை யெதிர்த்த கார்த்தவீரியன் என்னனமானான்? ஐம்புலன்களையு மொரு வழிப்படுத்தி மனத்தைத்தம் வசமாக்கிய மகானுபாவராகிய தாங்கள் கோபங்கொள்ளலா

மா? அறுவகை யுட்பகைகளையும் அறுத்தெறிந்த தாங்கள் சினந்தால் எம்மையாளுபவர் எவருமில்லையே! தாயைக் கற்பழித்துத் தந்தையைக் கொன்ற மகா பாதகனையும் கடவுள் காப்பாற்றி முத்தியளிக்க வில்லையோ? அருட்குன்றாகிய தங்களைச் சரணடைந்த எங்களைச்சபித்தாற் கருணை யென்பதே யுலகிலில்லாமற் போய்விடுமே! ஓ! குணக்குன்றே! மகா முனிவர்கள் யாவரும் கோபத்தை நீக்கவேயன்றோ தவஞ் செய்கின்றார்கள்? அநேகாயிர மாண்டு கடுந்தவம் புரிந்த விசுவாமித்திரரும் கோபத்தாலன்றோ தம் தவமுழுது மிழந்து விட்டார். இன்னுந் தசரதரோ நிரபராதி. அவர் அறியாமற் செய்ததனால் அவருக்குப் பாபமில்லையே. இவ்வுலகின்கண் மாயாவசப்பட்டு உழலும் ஆன்மகோடிகள் யாவுந் தவறுந் தன்மையுடையன வல்லவா? ஆதலின் தசரதன் தவறியதோ ராச்சரியமா? முனிவரா! தங்கள் அருமைப் புதல்வனிறந்தமைக்கு ஆற்றாது தசரதனைச் சபித்தால் அவனாற் காக்கப்படும் வையகந் துன்புறாதா? தாங்கள் ஒரு புதல்வன் இறந்ததன் பொருட்டு உலகம் முழுதும் ஒப்பற்ற செங்கோன் மன்னனை யிழந்து தவிக்குமாறியற்றுதல் நேரிதோ?

(பாடுகின்றான்).

* "கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல வோடும் வெய்யவ னென்னும் பேர
வெண்ணினுட் டலைக்கண் வைத்த கண்ணஃ தில்லை யாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறி தில்லை மன்றே." (௩௪)

இதுவோ கருணை? மேலும் உலகிற்பிறந்தார் இறத்தலியல்பன்றோ?

(பாடுகின்றான்.)

அலகில் சீவன்க ளகனில மாடரங் காக
விலகு பல்லுரு வேய்ந்துதா மியைபுற நடித்துத்
தலைவ னாணையா னுருவொழித் துறைவிடஞ் சாரு
முலக வாழ்வொரு நாடக மாகவோர்ந் துணர்வீர். (௩௫)

* சூளாமணி.

ஊனுடலை மாடரங்கா வுட்புறமே பத்தியமா
மாநடர்களைம்பொறியா வாய்த்தவுயிர் — நானிலத்துச்
சூத்திர தாரனுச் சோர்வினடஞ் செய்தபினர்
நீத்தொருவு மென்றறிவீர் நீர். (௬௬)

இன்னும் நன்றாக ஆலோசித்தால் (பாடுகின்றான்.)

* "சாதலும் பிறத்த றானுந் தம்வினைப் பயத்தி னாகு
மாதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே"
யாதலி னனைத்துந் தேர்ந்த வறிஞநீ கலுழ லென்னே! (௬௭)

எல்லாந்தெரிந்த தங்களுக்கு யான் சொல்ல வேண்டுவதொன்றுமில்லை. புத்திரசோகமேலீட்டினால் தாங்கள் அவசரப்பட்டு ஏதேனுஞ் செய்துவிடப் போகிறீர்களே என்று இவ்வளவு சொன்னேன்.

**சலபோசனர்** :—அடா! தசரதா! உன்னுடைய கையால் அவன் இறந்தமையால் அவன் முற்பிறப்பிலேதேனும் பாபங்கள் செய்திருப்பினும் அவை யாவும் உன்னுடையனவேயாம். அவன் வீரசொர்க்கத்தினையடைவான். நீ ஆராயாமல் அவன் ஒருவனுடைய உயிரை மாத்திரம் போக்கியதாகக் கருதாதே. எங்களிருவரது உயிரையும் உடன் போக்கினாய். திக்கற்ற யாங்கள் உயிர்விடுதல் திண்ணம். மிகவும் விருத்தாப்பிய தசையில் இப்படிப்பட்ட துன்பத்தை யெங்களுக்குத் தந்தனையே! மகா பாபி! நாங்கள் படும் கஷ்டத்தை நீ யறியவில்லை. 'தலைவலியும் தரித்திரமும் தமக்கு வந்தாற்றெரியும்'. நீ யெங்களுடைய நிலையிலிருந்தாற்றான் இந்தக் கஷ்டத்தையறிவாய். ஆதலால், நீயும் என்னைப்போற் புத்திரனைப்பிரிந்து புத்திர சோகத்தினால் இறப்பாய். நீ அறியாமையாற் றவறினமையாற் பிரமகத்தி உன்னைப்பற்றாமல் விட்டது, மகா தாதாவாகிய வொருவனுக்குத் துன்பம் வந்த காலத்துத் தருமதே

* சீவக சிந்தாமணி.

வதை யவன் முன்னே உடனே தோன்றிக் காப்பாற்றுவது போல. எனக்கு நீ உண்டாக்கிய புத்திரசோகம் போல் உனக்கும் சீக்கிரத்தில் உண்டாகும். இனியேனும்

* " எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
னெண்ணுவ மென்ப திழுக்கு" (௫௮)

என்று மொழிக்கிணங்க நடப்பாய். இனி இவ்வுலகத்தில் எனக்கென்ன இருக்கின்றது ? (பாடுகின்றான்.)

† " யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்த
லினிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவி
னின்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற்பே ரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே." (௫௧)

அடா ! சுசீலே !

சுசீலை :—அடே ! மைந்தா ! சுரோசனா ! என் கண்ணே ! என்னடா ஒன்றும் பேசவில்லை ? நீ யிவ்வாறு அதிசீக்கிரத்தில் உயிர் துறக்கவோ என் வயிற்றிற் பிறந்தாய் ? உனது திவ்வியமான மலர் போன்ற மேனியைத் தீண்டுதற்கும் உனது மதுரவாசகத்தைக் கேட்பதற்கும் தேவர்களோ கொடுத்துவைத்தனர் ? என் வயிற்றிற் பிறந்தும் எனக்குப் பயன்படாமலிவ்வித மிறத்தல் உன்னுடைய அறிவுக்கு நீதியாகுமோ ? நீ என்னை விட்

* திருக்குறள். † புறநானூறு.

டாலும் நான் உன்னை விட்டுப்பிரிக்கிறேன். இதோ வந்தேன் வந்தேன் ! (இரங்கிப் பாடுகின்றான்.)

மூன்றா னூற்று முதுமா தவத்தின்
 மூளையா யுதித்த கதிரே
மின்னா திடித்தோர் கருமேக மூடி
 வினையேமி னின்று னொளியை
யன்றோ பிரித்த வதிமாய மென்கோ
 லறியாம லிங்ங னிருளிற்
கொன்னே யிறப்ப விதயத்தி னம்பு
 குறிவைத்து விட்ட பரிசோ ? (௪௦)

மலரென்னு மேனி வெயிலான் வருந்த
 வனமூ டலைந்து பரலா
லலமந்து பாத மறவே சிவப்ப
 வடியேங்க ளாவி யழுதே
நலனண்ணு செய்ய கனிகாய்க ணாடி
 நயமாக நல்கு குழகா
வுலகின்கண் வாழ்க்கை யுறுதுன்ப மென்று
 னுளமுன்னி யேகு பரிசோ ? (௪௧)

**சலபோசனர்** :—ஐயோ ! சுரோசனா ! என் கண்ணே! என்னுடைய ஆசீர்வாத பலமிருக்கிற பொழுது ஒருவித துன்பமும் வாராதென்று கூறிய மைந்தா ! என்னுடைய தபோபலம் பிரயோசனப்படாமற் போயிற்றே! எனக்கு எப்பொழுதுஞ் சந்தோஷத்தையே தந்தவனாகிய நீ இப்பொழுது மாத்திரந் துக்கத்தைத்தரலாமா ? ‘வேழத்திற் பட்டுருவுங்கோல் பஞ்சிற்பாயாது’ என்பார்களே ! அந்த அம்பு உன்னுடைய பஞ்சினும் மிருதுவான தேகத்திலும் எங்ஙனம் பாய்ந்ததோ ? ஆமாம் ! அஃது அற்புதமான கணையன்றோ ? அம்பு யாவன் மேற்பட்டதோ அவன் இறந்ததனோடு படாத வேறிருவரையும் அது கொல்லுகின்றதே ! அந்தோ ! என்னுயிரே ! நீ போனால் உட

லாகிய யானும் அழிந்து போதல் நியாயமே! என் செல்வமே! (இரங்கிப் பாடுகின்றார்.)

வருமைந்தா வயதுநிரம் பாமுனமே கலையனைத்து
　மகிழ்ந்து கற்றாய்
பொருமைந்து கணையுடைய புத்தேளும் பொருவரிய
　பொற்பு வாய்ந்தோய்
தெருமந்து தவிக்கின்றேங் கவலகற்றி யெமக்குணவு
　சிறப்ப நல்கு
மருமந்த திருமகனே யாழ்துயரக் கடலினில்வீழ்ந்
　தாழ்கின் றேமால். (௬௨)

**சுசீலை** :—ஐயோ! என்னப்பா! (இரங்கிப் பாடுகின்றாள்.)

எனதன்பு கொண்ட விசைஞான மேய
　விளையோயெ னுவி நிலையே
வினையொன்றி வந்து சிலையம்ப தாக
　விளைவுற்று நின்ற பரிசோ
மனமுந்து தேரின் மிசையேக வுன்னை
　வழிபார்த் திருந்த வகைநான்
கனவொன்று கண்ட பரிசோ வதான்று
　கடியேன் றடுத்த பரிசோ? (௬௩)

**தசரதன்**:—அடடா! இவையெல்லாவற்றையுங் காணவோ என்தலையிற் பிரமனெழுதினான்?

**சலபோசனர்** :— (இரங்கிப் பாடுகின்றார்.)

கண்ணனையாய் கண்ணினுக்குண் மணியனையாய் யம்மணியின்
　கதிரே போல்வாய்
கண்ணிலர்யாம் நினைமகவாய்ப் பெற்றதனாற் கண்ணுடையார்க்
　கடுப்ப வாழ்ந்தே
மெண்ணுடையா யெழிலுடையா யிசைமழையெஞ்செவிப்பொ
　ழிலி யேய்ப்பாய் [ழியு
நண்ணியெம தருகினினி யில்லாத விவ்வுலக
　நரக மன்றே. (௬௪)

**சுசீலை :—** (இரங்கிப் பாடுகின்றாள்.)

உருகி யுள்ள மழிந்தனையோ
வுற்ற கணையூ டுருவுதலான்
வெருவி நிலத்தில் வீழ்ந்தனையோ
வெய்ய பகழி பறித்தனையோ
குருதி யாறாய்ப் பெருக்கினையோ
கோவென் றரற்றி யழுதனையோ
பருகு மினிய நீர்கொணரப்
பரிந்து சென்ற புதல்வாவோ ! (சரு)

**சலபோசனர் :—** (இரங்கிப் பாடுகின்றார்.)

இன்னமுதே யுனைப்பிரிந்தி யாந்தனியே யிவ்வுலகி
னிருத்த லென்னே
நன்னரொளி சான்றசெழு மணியிழந்த நாகமென
நலியா நின்றேந்
தன்னிடத்தின் மன்னுமுயிர் தனிற்பிரியும் யாக்கையெனச்
சாவா நின்றே
முன்னரிய பருவயிரத் தடந்தோளைத் தழுவியினி
யுவத்த லுண்டோ ? (சசு)

**சுசீலை :—** (இரங்கிப் பாடுகின்றாள்.)

செய்யாய் நீயுன் னுளமதனிற்
சிந்தித் திருந்த தென்னைகொலோ
வையா வென்னக் கூயினையோ
வம்மா வென்ன விளித்தனையோ
பொய்யா மிந்தப் புவியதனிற்
பொருந்தி வாழப் பொறுக்கிலேனே
ஐயோ வினிமே லுயிர்தரியே
னரசே யரசே யரசேயோ ! (சஎ)

(புதல்வனுடைய உடலின்மீது வீழ்ந்திறக்கின்றாள்.)

**சலபோசனர்** (இரங்கிப்பாடுகின்றார்.)

வின்மருவு கணைபாய்ந்து சுரோசனச்செங் களிறனையான்
விளிந்தா னந்தோ
வென்மகனை யானிழந்தே னுந்தலைவ னிழந்தீ
ரிருங்கான் வாழு
நன்மயில்கா ளினியென்று நன்மையிலீ ராயினிரா
ஞனு மென்ற
னின்மனைவி தானுமிவ னிறக்கின்றே மிறக்கின்றே
மிறக்கின் றேமால். (சஅ)

(புதல்வனுடைய உடலின்மீது வீழ்ந்திறக்கின்றார்.)

தசரதன் :—அந்தோ! மூவரும் இறந்தனர்! ஆகா! தெய்வச்செயலை யாவரே கண்டறிவார்? அயோத்தியை விட்டுப் புறப்பட்டது முதல் இதுவரையும் நிகழ்ந்த செயல்களனைத்தையும் நினைக்க நினைக்க யான் என்னையே மறக்கின்றேன். தவறுத லுலகினியற்கை. உலகிலுள்ள மானுடரில் யானுமொருவனல்லேனோ? எனினும் சிறிது ஆராயாமையினால் அநியாயமாய் மூவரிறந்தனர்! இதனானே உலகவாழ்வு அநித்தியமென்று தெரிவிக்கப்பட்டதுடன் நாமொன்று நினைக்கத் தெய்வமொன்றெண்ணும் என்னும் பழமொழி யுண்மையேயென்பதும் வெளியாயிற்று. எனது கைக்கணையாற் சுரோசனன் மாயவும் புத்திரசோகத்தால் அவனுடைய மாதாபிதாக்கள் இறக்கவும் நான் கொடுஞ்சாபம் பெறவும் நேரிட்டதை யுற்று நோக்குழி நிரபராதிகளையும் ஊழ்வினை யுருத்துவந் தூட்டுமென்ற வுண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெளிவாய் விளங்குகின்றது. விதியை வெல்வார் யாவர்? (பரிகிக்கின்றான்.)

* "ஆவது விதியெனி னனைத்து மாயிடும்
போவது விதியெனி னெவையும் போகுமாற்
றேவருக் காயினுந் தீர்க்கத் தக்கதோ
வேவரு மறியொணு வீசற் கல்லதே" (சகூ)

---

* கந்தபுராணம்.

எமராஜா! இனி நாம் இவ்விடத்தில் தாமதிக்கவேண்டிய அவசியமில்லை. இந்தக்களேபரங்களையெல்லாம் எடுத்துக்கொண்டுபோய் அந்த அருவியின் கரையிற் சேர்ப்பாயாக; ஆங்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்துவிட்டு நாம் அயோத்திக்கேகுவோம். முதலில் எனக்கு அரசாட்சி வேண்டாமென்று மறுக்கச்செய்த ஈசனே இப்பொழுது என்னை அயோத்திக்குப் போகுமாறு இயற்றுகின்றான். 'அவனன்றி யோரணுவும் அசையாது.' இன்னும் உலகிலிருந்து அனுபவிக்கவேண்டியவைகளை அனுபவித்தே தீர்க்கவேண்டும். அவன் எவ்விதம் நம்மையாட்டுகின்றானோ அவ்விதமே நாமும் ஆடுவோம்.

(எமராஜன் களேபரங்களை யெடுத்துப்போகின்றான்; தசரதன்பாடுகின்றான்.)

அரியோடய னஞ்சி யகன்றிடவெண்
டிரையோங்கி யெழுந்துறு தீயவிடங்
கரமேந்தி யருந்திய கண்ணுதலெம்
மரசேயிது வோவுன தாரருளே? (௫௰)

எமையாளுடை யீச வெனத்துதியாக்
கமையார்முனி மைந்தன் கனிந்தணையச்
சமனாருரன் சிந்திய தாட்கமலத்
தமலாவிது வோவுன தாரருளே? (௫௧)

வரமேவிய வன்மையின் வானமெலாஞ்
சரியாநலி தந்து தயங்கியவப்
புரமூன்று மழற்றிய புன்னகைசெய்
யரனேயிது வோவுன தாரருளே? (௫௨)

வெய்யவெஞ் சாப மொழிவலை வீழ்ந்த
விலங்கெனத் தவிக்குகோ தீயே
னையகோ நின்ற னடியருட் கடையே
னருந்துயர்க் கடலினி லமிழ்கோ

பொய்யனேன் பட்ட பாடுகள் போதும்
போதுமென் புகரிலா மணியே
மையமர் களனே வானவ ரிறையே
மகிழ்ந்தெனைக் காத்தரு ளுதியோ. (௫௯)

(தசரதன் போகின்றான்.)

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

## பரத வாக்கியம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

**ப**னவர்குல முப்பொழுதும் பரவா நிற்பப்
    பன்னரிய நாடகத்தென் கலைவி ரித்தென்
மனமெனுமம் புயமலர்த்தி மகிழ்ந்து கற்கு
    மாணாக்க ருளத்தினில்வா னமுதம் வாக்குங்
கனைகழற்சூ ரியநாரா யணனெ னும்பேர்க்கு
    காமர்தமிழ் முகிலுலகில் வாழ்க நாளும்
புனைவுறுமிவ் வங்கமுநற் றமிழும் போற்றும்
    புலவர்களும் பொலிந்தினிது வாழ்க மாதோ. (௫௬)

---

திருச்சிற்றம்பலம்.

# செய்யுண் முதற்குறிப் பகராதி.

[உடுக்குறியுற்றன மேற்கோட்பாக்களாம்.]


| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| அங்கயிலை | ... 10. | செங்கமலப் | ... 8. |
| அந்தோவிரு | ... 35. | செந்தாமரைக் | ... 9. |
| *அரியானை | ... 11. | செய்யாய்நீ | ... 48. |
| அரியோட | ... 50. | தந்தைதாய் | ... 13. |
| அலகில்சீ | ... 43. | தாரக்கணங்கு | ... 8. |
| அளவிலாக் | ... 18. | *தாய்சொற்று | ... 13. |
| அளியின | ... 19. | நளிர்மதிச் | ... 10. |
| அன்றமரர் | ... 29. | நாடுவேண்டேன் | ... 32. |
| ஆண்டுநீரி | ... 18. | நூல்வாய்ப் | ... 3. |
| *ஆவதுவிதி | ... 50. | பணிமுனி | ... 10. |
| இன்னமுதே | ... 48. | பத்துமதி | ... 9. |
| உண்மைமநிலை | ... 24. | பற்கழன்று | ... 12. |
| உருகியுள்ள | ... 48. | பனவர்குல | ... 53. |
| உலகெலா | ... 3. | பணிபடு | ... 15. |
| *உறங்குமாயினு | ... 24. | பூத்தநன்மனப் | ... 10. |
| ஊனுடல | ... 44. | பொன்னிறத் | ... 19. |
| *எண்ணித்துணி | ... 45. | பொன்னைமாதைப் | ... 29. |
| எமையாளுடை | ... 50. | மலரென்று | ... 46. |
| எனதன்பு | ... 47. | மலையினின் | ... 18. |
| என்னேனொரு | ... 4. | முதுமறை | ... 4. |
| ஐயாவென் | ... 9. | முன்றுளுற் | ... 46. |
| ஐயோவரு | ... 39. | மூவாமுதல் | ... 12. |
| கண்ணனையாய் | ... 47. | *யாதுமூரே | ... 45. |
| கண்ணிரண்டு | ... 31. | வரமேவிய | ... 50. |
| *கண்ணெனப் | ... 43. | வருமைந்து | ... 74. |
| கர்னகத்து | ... 8. | வின்மருவு | ... 49. |
| *சாதலும்பிறத் | ... 44. | வெய்யவெஞ்சா | ... 50. |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 9 | 17 | துச்களுச்கும் | துக்களுக்கும் |
| 16 | 20 | பணிவிடை | பணிவிடை |
| 20 | 8 | காணபபடும் | காணப்படும் |
| 26 | 13 | காட் | காட்டு |
| ,, | 25 | விசேஷ | விசேஷ |
| 29 | 12 | கழுவாமு | கழுவாயுமு |
| ,, | 18 | மேங்கலிவ | மேங்கவிவ |
| 31 | 7 | நடுங்ளு | நடுங்கு |
| ,, | 18 | துர்த | ருந்த |

# நாமகள் சிலம்பு.

## பரல்: க.—ரூபாவதி அல்லது காணாமற் போன மகள்.

[இஃது ஒரு புதிய தமிழ் **நாடகம்**; ஐந்து அங்கமுள்ளது; ஆடவரும் பெண்டிரும் அகமகிழ்ந்து வாசிக்கத்தக்கது; கதையின் மூலமாய்ச் சிறந்த நீதிகள் பல கற்பிப்பது; பண்டிதருஞ் சாமானியரும் ஒக்கப் பாராட்டத் தகுவது; வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார், பி. ஏ., இயற்றியது; பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டுளது; கலிகோ கட்டட முள்ளது; விலை: ரூ. 1-0-0. தபாற்கூலி வேறு.]

## பரல்: உ.—கலாவதி.

[இஃது ஒரு புதிய தமிழ் **நாடகம்**; ஏழங்க முள்ளது; மகளிராடவர் மகிழ் சிறந்து படிக்கற்பாலது; கதையினடியாய்ச் சிறப்பு வாய்ந்த நீதிகள் பல கட்டுரைப்பது; கற்றாருங் கல்லாருங் கண்டு ஒருங்கே களிகூரத்தகுவது; சுதந்திர யூகமுங் கற்பனைத்திறனும் வாய்ந்தது; வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார், பி.ஏ., இயற்றியது; நல்ல உயர்ந்த பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டுளது; விலை: ரூ. 1-8-0. கலிகோ கட்டடமுளதாயின் விலை ரூ. 1-12-0. தபாற் கூலிவேறு.]

பரல் : ௩.—சரசாங்கி.

[இஃது ஒரு புதிய தமிழ் நாடகம்; ஐந்து அங்கமுள்ளது; காலஞ்சென்ற திரு-சலசலோசனச் செட்டியார் இயற்றியது; மக்கள் யாவரும் மகிழ்ந்து படிக்கற்பாலது; நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுளது; கலிகோ கட்டடமுள்ளது; விலை ரூ. 1-0-0. தபாற்கூலிவேறு.]

பரல் : ௪.—சுகுணசுகேசர் அல்லது நட்புங்காதலும்.

[இஃது ஒருபுதிய தமிழ்நாடகம்; ஐந்து அங்கமுள்ளது; சருக்கை-இராமசாமி ஐயங்கார், பி. ஏ. இயற்றியது; எத்தகைய மக்களும் விருப்பங் குன்றுதவாறு படிக்கத்தக்க இனிமையான நடையி லெழுதப்பட்டுளது; பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டுளது; விலை அணா. 0—8—0. தபாற்கூலி வேறு.]

பரல் : ௫.—தசரதன் தவறு.

[இஃது **அங்கம்** என்னும் ஒருவகை நாடகம்; ஓரங்கமுள்ளது; அவலச்சுவை பெரிது முடையது; ந-பலராம ஐயர் அவர்கள் இயற்றியது; விலை அணா. 0—4—0. விரைவில் வெளிவரும்.]

பரல் : ௬.—இந்துமதி அல்லது கற்பரசி.

[இஃது ஒருபுதிய தமிழ் நாடகம்; ஆறங்கமுள்ளது; இனிய தமிழ் நடையி னியன்றுளது: யாவரும் வாசிக்கத்தக்கது; சருக்கை - இராமசாமி ஐயங்கார், பி. ஏ., இயற்றியது; விலை : அணா. 0—12—0, விரைவில் வெளிவரும்.]

## பரல் : எ.—சூர்ப்பணகை.

[இது பிரகசனம் என்னும் ஒருவகை நாடகம்; ஈரங்கமுள்ளது; நகைச்சுவை பெரிதும் வாய்ந்தது; எத்தகையோரும் படித்துக் களிகூரத்தக்கது; வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ., இயற்றியது; விலை: அணா. 0—6—0. விரைவில் வெளிவரும்.]

## பரல் : அ.—மானவிஜயம்.

[இஃது அங்கம் என்னும் ஒருவகை நாடகம்; ஓரங்கமுள்ளது; அவலச்சுவை யாற்றவும் வாய்ந்தது; வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ., இயற்றியது; விலை: அணா. 0—4—0. விரைவில் வெளிவரும்.]

## பரல் : கூ.—உஷாபரிணயம்.

[இது நாட்டியராசகம் என்னும் ஒருவகை நாடகம்; நாலங்கமுள்ளது; இனிய நடைவாய்ந்தது; சருக்கை - இராமசாமி ஐயங்கார், பி. ஏ., இயற்றியது; விலை: அணா. 0—8—0. விரைவில் வெளிவரும்.]

## பரல் : கo.—முத்திரா ராட்சசம்.

[இது வடமொழியினின்றுந் தமிழில் மொழிபெயர்த்ததோர் நாடகம்; எழுங்கமுள்ளது; வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ., இயற்றியது; இராச தந்திரங்களுட் பலவற்றை யினிது விளக்குவது; விலை: அணா. 0—12—0. விரைவில் வெளிவரும்.]

பரல் : கக.—தமயந்தி.

[இஃது ஒரு புதிய தமிழ் நாடகம் ; ஐந்து அங்கமுள்ளது ; இனிமையான தமிழ் நடையி னியன்றுளது ; பெண்பாலாரும் ஆண்பாலாரும் பெரிதும் போற்றிப் படிக்கத்தக்கது ; பி. ஏ. பிரணதார்த்திஹர சிவனார், பி. ஏ., இயற்றியது ; விலை : அணா. 0—8—0. விரைவில் வெளிவரும்.]

பரல் : கஉ.—விக்கிரமோர்வசி.

[இது துரோடகம் என்னும் ஒருவகை நாடகம் ; வடமொழியினின்றும் தமிழின் மொழிபெயர்த்தது ; ஐந்து அங்கமுள்ளது ; இன்பச்சுவை பெரிதுமியைந்தது ; சருக்கை-இராமசாமி ஐயங்கார், பி. ஏ., இயற்றியது; விலை : அணா. 0—6—0. விரைவில் வெளிவரும்.]

# தமிழ்மகள் மேகலை.

---

## கிங்கிணி : க.—நாடகவியல்.

[இது நாடகத்தமி ழிலக்கண நூல்; நாடகவமைதியை நன்கு விளக்கி இனிமை தோன்றக் கூறுவது; தமிழ் மொழியின் மீது ஆர்வமுடையார் யாவர்க்கும் இன்றியமையாதது; மிகவும் புதுமையாக அமைக்கப்பட்டுளது; 272 சூத்திரங் களினியன்றது; வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ., இயற்றியது; நல்ல பளபளப்புள்ள கடிதத்தில் அச் சிடப்பட்டுளது; விலை அணா. 0—8—0. தபாற்கூலிவேறு.]

## கிங்கிணி : உ.—தனிப்பாசுரத்தொகை. முதற்பகுதி.

[இது 40 தனிப்பாசுரங்களடங்கியதோர் உறுதிநூல்; அரு மையும் பெருமையும் வாய்ந்த பல பொருள்களை யெடுத் துரைப்பது; மாணாக்கர் யாவர்க்கும் பெரிதும் பயன்படத் தக்கது; வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ., இயற்றிப் **பரிதிமாற்கலைஞன்** என்னும் புனைவு பெயரில் வெ ளியிட்டது; கனம் பொருந்திய ஜி. யூ. போப்பையரவர்க ளான் ஆங்கில பாஷையினுஞ் செய்யுளாக மொழிபெயர்க் கப்பட்டுளது; உயர்ந்த பளபளப்புள்ள கடிதத்தி லச்சிடப் பட்டுளது; விலை : அணா. 0—4—0. கலிகோ கட்டட முளதாயின் அணா. 0—8—0. ஆங்கில மொழிபெயர்ப்பு முடன் கொண்டது ரூ. 1—0—0. தபாற்கூலி வேறு.]

**கிங்கிணி : ௩.—பாவலர் விருந்து.**

[இஃது இனிமையும் புதுமையும் வாய்ந்த சிறிய செய்யுணூல்கள் சில கொண்டது ; ஆங்காங்குச் சில புதிய கருத்துக்கள் அடங்கியது ; வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ., இயற்றியது ; விலை : அணா. 0—8—0. விரைவில் வெளிவரும்.]

**கிங்கிணி : ௪.—தாமரை நாண்மலர்.**

[இஃது இனிமைவாய்ந்த சிறிய செய்யுணூல்கள் சில கொண்டது ; யாவர்க்கும் பயன் படத்தக்கது ; ந. பலராமையர் அவர்கள் இயற்றியது ; விலை : அணா. 0—6—0. விரைவில் வெளிவரும்.]

**கிங்கிணி : ௫.—புட்பபாண விலாசம்.**

[இது வடமொழியினின்றுந் தமிழில் மொழி பெயர்த்ததோர் செய்யுணூல் ; உவமைச்சுவை பெரிதும் உற்றது ; அகப்பொருட் கருத்தமைந்தது ; சருக்கை - இராமசாமி ஐயங்கார், பி. ஏ., இயற்றியது ; விலை : அணா. 0—2—0. விரைவில் வெளிவரும்.]

# இன்ப வல்லி.

## மலர் : க.—மதிவாணன்.

[இது மிகவும் உயரிய நடையினியான்றுளதோர் புதுமையான செந்தமிழ்க்கதை ; சிறப்பு வகையால் தமிழ்மொழி பயிலுநர் யாவர்க்கும் இன்றியமையாதது ; இருபத்தைந்து அத்தியாயமுள்ளது ; வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ., இயற்றியது ; விலை : அணா. 0—12—0. விரைவில் வெளிவரும்.]

## மலர் : உ.—கமலினி.

[இஃது ஒரு புதுமையான தமிழ்க் கதை ; கற்றாருங் கல்லாரும் ஒருங்கே படித்துக் களிகூரத்தக்க நடையில் எழுதப்பட்டுளது ; சருக்கை - இராமசாமி ஐயங்கார், பி. ஏ., இயற்றியது ; விலை : அணா. 0—8—0. தபாற்கூலி வேறு. விரைவில் வெளிவரும்.]

## மலர் : ௩.—இலீலை.

[இஃது உயர்ந்த செந்தமிழ் நடையி லெழுதப்பட்டுளதோர் புதுமையான கதை ; தமிழ் மொழியின் மீது அன்புடையார் அனைவர்க்கும் இன்றியமையாதது ; இருபத்தைந்து அத்தியாயமுள்ளது ; ந. பலராமையர் அவர்கள் இயற்றியது ; விலை : அணா. 0—8—0. தபற்கூலி வேறு. விரைவில் வெளிவரும்.]

மலர் : ச.—நன்றியறியாமகன்.

[இஃது ஒரு புதுமையான தமிழ்க் கதை; மகளிரும் ஆடவரும் மிக்க மகிழ்ச்சியோடும் படிக்கத்தக்கது; கு. ரா. ஸ்ரீனிவாச ஐயங்கார், பி, ஏ., இயற்றியது; சீக்கிரமாக அச்சிடப் படுகின்றது; விரைவில் வெளிவரும். விலை: அணா. 0—8—0. தபாற்கூலி வேறு.]

மலர் : ரு.—இன்னுமா ?

[இஃது இனிமையும் புதுமையும் வாய்ந்ததோர் தமிழ்க்கதை; யாவர்க்கும் விளங்கத்தக்கவாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுளது; வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ., இயற்றியது; விலை : அணா. 0—8—0. விரைவில் வெளிவரும்.]

☞ இம்மூவகை நூற்றொகைகளுக்கும் பதிப்பாசிரியர் சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

Thompson and Co., Steam Printers, Madras.